சிலம்பு ௨௬	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, தை பிப்ரவரி, 1955.	பரல் ௬

அண்ணாமலைப் பல்கலைக்கழக
வெள்ளிவிழாத் திருநாள்

‘ ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்.’

உலகந் தோன்றிய காலத்துத் தோன்றிய சீரிய மொழி, நம் செந்தமிழ்மொழி. இஃது, இயற்கை நுட்பம் வாய்ந்த மெல்லிய இனிய மொழி; முன்னை மொழிகட்கெல்லாம் முன்னைய மொழி; பின்னை மொழிகட்கெல்லாம் பிறப்பிடமாகிய தாய்மை மொழி.

இதன்கண், ஆழமிக்க கருத்துரைகளும், மக்களுக்கு வேண்டும் அறம் மறம் மானம் நிறை பொறை ஓர்ப்பு முதலிய பண்பாடுகளும் விளக்கிக்காட்டும் அற நுண்ணியற் கலைகளும், இசை சிற்பம் மருத்துவம் முதலிய கவின்கலைச் செல்வங்களும் நிறைந்து பயன்தரும் சீரிய கருவூலங்கள் அமைந்துள்ளன.

இத்தகைச் சீர்மை சான்ற நம் செந்தமிழ்மொழியை வேற்றுநாட்டார் ஆட்சியினல் போற்றுவாரற்று, இக்கலைச் செல்வங்களைக் கற்பாரும் கேட்பாரும் இன்றித் தமிழிற் பேசுவதும் எழுதுவதுங்கூட அருவருப்பாகக்கொண்டு காலூன்றி வருங்காலத்தில் தோன்றியது, **அண்ணுமலைப் பல்கலைக்கழக**மெனப் *பெயரிய கலைக்கோயில்.*

பாரி பிறந்த தமிழகத்தில்—பேகன் தோன்றிய பெருநாட்டில்—குமணன் வந்த கொழுந்தமிழ் நாட்டில்—தண்ணார்

தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில்—அண்ணாமலை அரசர் தோன்றினார்கள். நம் தமிழ்நாட்டில் தமிழ் மொழிநிலை கீழாகக் கொள்ளப்பெறுதலை அவர்கள் கண்டார்கள். இவர்கள், வற்றாவளனுடைய வான் குடிமையில் பிறந்து, அரசர்க்குரிய அரிய பண்புகளெல்லாம் வாய்ந்து திகழ்ந்தார்கள். இவர்கள், காட்சிக்கெளியராய், கடுஞ்சொல் இலராய், இன்சொல் நீரராய் இலகினார்கள்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலினும் வல்லராக விளங்கினார்கள்; இவர்கள்பால் இல்லாதன மடிமையும், பொச்சாப்பும், தூங்காமை முதலிய தீநெறிகளே. இவர்கள்பால் புக்கன, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், கல்வி, துணிவுடைமை, வற்றாப் பெருந்திரு முதலியனவாம்.

இவ்வள்ளன்மைமிக்க ஒள்ளியார் இற்றைக்கு இருபத்தைந்தாண்டுகட்குமுன் தம் தமையனார் திரு. இராமசாமி செட்டியாரவர்களின் பெயரால் தில்லையில் நடைபெற்றுவந்த உயர்நிலைப் பள்ளியையே தமிழ் வளர்ச்சிக்கு முதலிடமாக அமைத்து **1929-ஆம் ஆண்டு திசம்பர்த்திங்கள் 6-ஆம் நாளிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழக**மெனப் பெயரமைத்துத் துவங்கி, அற்றை நாண்முதல் கழகம், தன் சீரிய பணியைச் செய்துவருகின்றது.

கடந்த இருபத்தைந்தாண்டுக் காலத்தில், இக்கழகம் நாட்டுக்கும், மொழிக்கும், கலைக்கும் செய்துவருகின்ற தொண்டுகள் அளப்பில. இதன்கண் கற்றுத் துறைபோய பேரறிஞர்கள் பலர், தம் அரிய பாவன்மை நாவன்மை முதலியவற்றான் அரும்பெறல் தொண்டுகள் செய்து ஆக்கம் பெருக்கியுள்ளனர். அதனால் கல்விநலம் பெற்ற மாணவர்கள் பலராவர். மொழிபெயர் நாட்டு மாணவர்களும் பற்பலராவர்.

இக் கழகத்தால் நம் தமிழகத்தின் பெருமை, உலகம் முழுதும் பரந்து வளர்ந்துள்ளது. இதனைத் தோற்றுவித்த செட்டிநாட்டரசரவர்களின் வள்ளன்மை, நிலத்தினும் பெரிதாய், வானினும் உயர்ந்ததாய் வளர்ச்சிபெற்றுள்ளது. இதற்காக அரசரவர்கள் ஐம்பது நூறாயிர வெண்பொற்காசுகளை வாரி வழங்கியுள்ளார்கள். கொடையில் மடம்படாது திடமுடன் கூர்த்தறிந்து வழங்கிய அண்ணாமலையரசர் கூர்த்த மதிநலம், மாநிலம் உள்ளளவும் மங்காது போற்றும் பெருமைமிக்கதாக வளர்ச்சியுறுகின்றது.

பல்கலைக்கழக வரலாறும், அதைத் தோற்றுவித்த அண்ணாமலை வள்ளல் வரலாறும் இதனகத்தே விரிவாக மற்றோரிடத்தில் வெளிப்போந்துள்ளன.

இத்திங்களில் நிகழும் இக்கழக வெள்ளிவிழா நினைவாக ஒரு தமிழ்ப் பேராசிரியரை அமர்த்துதற்கென, இந்திய அரசியலார் மூன்று நூறாயிர வெண்பொற் காசுகளை வழங்கி ஊக்கியுள்ளது பெருமகிழ்வுக் குரியதாகும்.

திசைய அனைத்தும் வீறுகொண்டு பண்டைக்கால முதல் திகழும் நந்தமிழர் பண்பாட்டை, உலகமெல்லாம் பங்குகொள்ள உதவிய அண்ணாமலை அண்ணலார் குறிக்கோள் வெல்க; வாழ்க.

இருபத்தையாண்டுக் குறுகிய காலவெல்லையுள் நூறாண்டுக் காலத்தினும் ஆற்ற இயலாத அருந்தொண்டை இக்கழகம் ஆற்றி வருவது, இக்கழகத்தின் இடையறா முயற்சியின் சிறப்பைக் காட்டுகின்றது.

கற்றுத் துறைபோய ஆசிரியர்கள் நூற்றெழுபத்தைவருக்கு மேற்பட்டவர்கள் பணிபுரிகின்றனர்; இரண்டாயிரவர்க்கு மிகுந்த மாணவர் கல்வி பயில்கின்றனர்; ஒரு நூறாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களடங்கிய கலைக்கருவூலம் ஒன்றும் இருந்து கற்பவர்க்குக் கலையறிவை ஊட்டுகின்றது; நூற்றுக்கு மேற்பட்ட அரிய ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. இன்னும் இக்கழகம் செய்துவரும் பணி, அளப்பொண்ணாதனவாகும்.

நந்தமிழ் நாட்டுக்கும், ஏனைய நாடுகட்கும் நாடா வளந் தந்து கலைச்செல்வத்தை வளர்த்துவரும் இவ் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மாதொருபாகத்தெம் சிவபெருமான் தண்ணருளால் இற்றைநாள் (9-2-1955) வெள்ளி விழாவின் மேலோங்கி வளர்வதாக; பொன் விழாவும், வைரவிழாவும் பெற்றுப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுகள் படர்ந்து மேலோங்குவதாகுக.

இதனைத் தோற்றுவித்த அண்ணாமலை வள்ளலார் திருப்பெயருடன் கூடிய புகழ், நாடெல்லாம் மண்டிப்பெருகி நிலவுவதாக. தந்தையார் வழிநின்று தக்கன செய்து போதரும் இராசா சர் முத்தையச் செட்டியாரவர்களும் அவர் வழியினரும் நெடிது வாழ்ந்து வளம் பெருகுக என வாழ்த்துகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக

வெள்ளிவிழாப் பாராட்டு

[கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாதபிள்ளை]

திருப்பெயர்

இச்சீரிய பல்கலைக் கழகம் தில்லை எல்லையின் அண்மையில் திருவேட்களத்திருவூர்நாப்பண் மண்ணகத்துப் பல்லாற்றானும் விண்ணிழி விழைநகர் என்று எல்லாரானும் போற்றிப் புகழப் பெறும் அண்ணாமலைநகர்க்கண் அமைந்து திகழ்கின்றது. இந் நகரும் இப்பல்கலைக் கழகமும் "டாக்டர் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார்" அவர்களின் திருப்பெயரால் திகழ்கின்றன.

திகழ்வு

இந்நகர் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பினையும், ஆயிரக்கணக்கான ஓரறிவுயிரினம் செறிகாவினையும், வானளாவ உயர்ந்து விளங்கும் கல்விபயில் பல்கலைக் கோயில்களையும், பல வகைக்கலையின் ஆராய்வுகள் திறம்பெற நிகழ்தற்காம் கருவி முதலிய பொருள்களுடன் இடமகன்ற பற்பல ஆய்வுக்களங்களை யும், பல்வேறு கழகங்கள் தனித்தனி இயங்கும் பல மன்றங்களை யும், பொதுமேடைகளையும், சொற்போர் நிகழ்த்தும் பல பட்டி மண்டபங்களையும், பட்டமளிப்பு விழா நிகழும் மேன்மாடக் கூடல் நிலையங்களையும், ஆசிரியன்மார் குடும்பத்துடன் உறைந்து உணர்வு பெருக்கும் உணர்வு இல்லங்களையும், மாணவ மாணவி யர் உறையுளாம் பல மனைகளையும், மாணவ மாணவியர் தனித் தனி அமைத்துப் பயிலும் பல்கழகங்களையும், கூத்த அரங்கங் களையும், இயல் இசை மிளிரும் நயனுர் கோவில்களையும், பணி செய்வார் தொண்டுபுரிவோர் பயிலும் மடங்களையும், இருவகை விருந்தினரும் இடையறாது உறையும் விருந்தகங்களையும், ஊட்டுப் புரை, குளிப்புப்புரை, வணக்கக்கோவில், நீர்நிலைகள், ஆமைப் புறமன்ன அழகிய நடைவழிகள், பகலேஎன மருளும் பல்வேறு மின்விளக்குகள் அமைந்த நனிநாகரிகத் தெருக்கள், அஞ்சலகம் முதலியவற்றையும் கொண்டு திகழ்கின்றன. இஃது அண்ணாமலை என்னும் பெயருக்கேற்ப எல்லாவகையானும் தலைமைசான்ற தாகவே இருக்கின்றது. அண்ணல் - தலைமை.

சிறப்பு

அண்ணாமலைவள்ளலின் அகம்இன்னதென்றறியலுறுவார்க்கு இந்நகர் தக்கவிடைதரும் தன்மைத்து. அகவிருள் போக்கும்

அறிவுச்சுடரினை அகத்தே அமைப்பதுதான் அவ்வள்ளலாரின் அருங்குறிப்பு. அகவிருள் அகலின் அனைத்துயிரும் மும்மையும் பெற்றுச் செம்மையாய் வாழும் என்பது உறுதி. அதனை எளி தின் நல்குவது அண்ணாமலைப் பல்கலைக் கழகமேயாம். இது தமிழ்மொழிக்கும், தமிழிசைக்கும், தமிழ்நெறிக்கும் ஆற்றி வரும் சீரிய தொண்டு அளப்பில. இதன் நிலைவளர்வு 1915-ம் ஆண்டுத் தொடக்கமுதல் வருகின்றது. பெருவள்ளலாரின் திருத் தமையனார் திவான்பகதூர். இராமசாமிச் செட்டியார் திருப் பெயரால் உயர்நிலைப்பள்ளியாய்க் கிடந்து, தனிப்பெரும் தாயார் மீனாட்சி அம்மையார் திருப்பெயரால் கல்லூரியாகத் தவழ்ந்து, தன் திருப்பெயரால்—அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக உலாவி ஏறுபோற் பீடு நடையாய்த் திகழ்கின்றது.

சீர்மை

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர், நூற்றெழுபத் தைவர்க்கு மேற்பட்ட ஆசிரியர், ஒரு நூறாயிரம் நூற்கள் அடங் கிய நூல்நிலையம், ஆயிரத்திருநூறு மாணவர் உறையும் பல இல் லங்கள், மாணவியர் எண்பதின்மர் தங்கக்கூடிய பலவுறையுள் கள் முதலியவற்றின் சீர்மையைக் கொண்ட அருள் நிலையம் இப் பல்கலைக் கழகம். இஃது இப்பொழுது வெள்ளிவிழாப் பெற்றுப் பலரும் உள்ளங்களிகூர ஒளிர்கின்றது. இவ்விழாத் தலைமை மைசூர் மன்னரேஎனின் அதன் மாண்பு எங்ஙனம் கட்டுரைப் பது. விழாக் காண்பாரும், விரிவுரையாற்றுவாரும், வரவேற் புரை பகர்வாரும், தலைமையுரை சாற்றுவாரும் எல்லாவகை யாலும் தலைமையரே. மேலும், பொன்விழா, வயிரவிழா, முத லிய நன்விழா பலபெற்று நாளும் வாழ்க.

சேர்வு

அரச வள்ளலார் அண்ணாமலையார் போன்று அவர்தம் திரு மகனார் அரசர் முத்தையச்செட்டியாரும் தந்தையாரைப் பேணு வதுபோல் தந்தையார் ஊக்கத்தையும் கைக்கொண்டு இப்பல் கலைக் கழகச் சேர்ப்பாய்த் தமிழகத்தின் ஈரெல்லையும் நாப்பணு மாகப் பல்வேறு தமிழ்ப் பல்கலைக் கழகங்கள் நிறுவிப் போற்று வார்களாக. தில்லை அம்பலவாணர் திருவருள் புரிவாராக. அண்ணாமலை வள்ளலார் வாழ்க. அப்பெயர்ப் பல்கலைக் கழகம் வாழ்க. ஆழ்ந்த பெருஞ் செல்வ அக்குடும்பம் வாழ்க. ஆசிரிய மாணவர் அலுவலர் அனைவரும் வாழ்க. தமிழ்மொழி வாழ்க. தமிழ்நெறி வாழ்க. தமிழகம் வாழ்க.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாறு

டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களின் தமையனாராகிய திவான் பகதூர். இராமசாமிச் செட்டியாரவர்கள் தம் பெயரால் ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சிதம்பரத்தில் நிறுவினார்கள். தமையனார் அவர்கள் 1915-இல் இறையடி சேர்ந்தமையின் அவர்கள் வகுத்த அறங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களைச் சேர்ந்தது. தமையனார் பெயரால் நடைபெற்று வரும் உயர் நிலைப் பள்ளியை முதற்றரக் கல்லூரியாக்க ராஜா அவர்கள் எண்ணினார்கள். தம் எண்ணப்படியே 1920-ஆம் ஆண்டில், சென்னை மாகாணக் கல்வித்துறைத் தலைவர் வீட்டில் ஹெயில்ஸ் அவர்களால் அப் பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்புத் தொடங்கப்பெற்றது. அக் கல்லூரிக்குத் தம் அருமை அன்னையாரின் நினைவாக மீனாட்சிக் கல்லூரி எனப் பெயரிட்டார்கள். திரு. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் அதன் தலைவராக விளங்கினார்கள். சிறந்த ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் அக் கல்லூரி செவ்வனே நடைபெற்று வருவதாயிற்று. ஊர் நடுவண் அமைந்திருத்தலால், கல்லூரிக்கு இடம்போதாதென் றெண்ணிய அண்ணாமலை வள்ளல் தில்லைப் பதியின் கீழ்பால் எல்லையில், ஒன்றரைக் கல் தொலைவில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற திருவேட்களத்தில், நூறு ஏக்கர் நிலம் வாங்கினார்கள். உரிய கட்டடங்கள் விரைவில் கட்டி முடிக்கப் பெற்றது. கட்டட வேலைகள் முற்றுப் பெறுமுன்பே பி. ஏ. வகுப்புத் தொடங்கப் பெற்றது. 1920-ல் கல்லூரி முதல்வகுப்பில் பயின்ற மாணவர்கள், 1922-ல் மேல் வகுப்பில் சேர்தற்குரிய வசதிகள் செய்யப்பெற்றன. 29-6-1922-ல் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சி. ஆர். ரெட்டி அவர்கள் பி. ஏ. வகுப்பைத் தொடங்கிவைத்து, ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய கலைப் பணியினைப் பாராட்டினார்கள். அதனுடைய சிறந்த எதிர்கால வளர்ச்சியைப்பற்றியும் முன்னரே உணர்ந்துரைத்தார்கள். மீனாட்சி கல்லூரி ஒரு பல்கலைக் கழகமாக அமைய வேண்டும் என்றெண்ணியிருந்த ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களை ரெட்டி அவர்களின் பேச்சு, ஊக்குவித்தது.

1924-ல் ஆசிரியர் சிலரும், மாணவர் சிலரும் தங்கியிருத்தற்கு வீடுகளும், விடுதிகளும் அமைக்கப் பெற்றன. 1925-ல் ஆங்கிலம், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றில் கலைச்சிறப்பு (பி. ஏ. ஆனர்ஸ்) வகுப்புக்களும் தொடங்கப்பெற்றது விஞ்

ஞானப் பகுதிக்கும், ஆராய்ச்சிக் கூடத்திற்கும் தனிக்கட்டிடம் ஒன்று கட்டப்பெற்றது. அப்போது சென்னைக் கவர்னராயிருந்த கோஷன் பிரபு அவர்கள், 1926-ல் விஞ்ஞானப் பகுதியைத் திறந்துவைத்து, அண்ணாமலை வள்ளலின் கலையார்வத்தினைப் பாராட்டினார்கள். தமிழர் தம் தனிப்பண்புகளை அறிந்து வளர்ப்பதற்குத் தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கிய இலக்கணங்களைக் கற்றறிதல் வேண்டுமென்ற நன்னோக்கத்துடன் 1927-ல், மீனாட்சி தமிழ்க் கல்லூரியை அண்ணாமலை வள்ளல் நிறுவினார்கள். அதற்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தலைவரானார்கள். அவ்வாண்டிலேயே வடமொழிக் கல்லூரி ஒன்றும் நிறுவப்பெற்றது. தமிழ் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் தோன்றியது. இசை வளர்ச்சிக்கும் ஆவன செய்யவேண்டுமென் றெண்ணிய அண்ணாமலை வள்ளல், 1929-ல், இசைக் கல்லூரி ஒன்றையும் நிறுவினார்கள். இதுபற்றிய வளர்ச்சிக் குறிப்பு, இம் மலரில் ஓரளவு தனியாக உள்ளது. 1920-ஆம் ஆண்டு முதல் 1929-ஆம் ஆண்டுவரை பத்தாண்டுகளுக்குள் நான்கு கல்லூரிகளை ராஜா அவர்கள் அமைத்துக் கல்வியை வளர்க்கும் அரும் பணியில் தலைசிறந்து விளங்கினார்கள்.

தொடக்கத்திலேயே ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், ஒரு பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென எண்ணியிருந்தபடியால், விளையாடுமிடங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றையெல்லாம் மிகப் பெரிய அளவிலேயே அமைத்தார்கள். அண்ணாமலை வள்ளலின் திட்டங்கள், ஆசிரியர்களும், மாணவர்களும் உடனுறையும் ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ்வதற்குத் தகுந்தவாறு உருவாயின.

1926-ல், அரசாங்கம், தமிழ்மொழிக்கென்று ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதுபற்றி ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தது. எத்துணைப் பல்கலைக்கழகங்களை நிறுவலாமோ அத்துணைப் பல்கலைக்கழகங்களை நிறுவலாமென்றும், ஆனால் பொருள் வசதி யின்மையின் ஒரு பல்கலைக் கழகங்கூட உடனடியாகத் தொடங்குதற்கில்லை யென்றும் அக்குழு அறிவித்தது. அப்போது, சென்னைப் பல்கலைக்கழகக் குழுவினர், மீனாட்சி கல்லூரியை நேரில் வந்து பார்த்து, அதனுடைய நடைமுறைகளைக் கண்டு வியந்தனர். சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதற்குரிய திட்டத்தை அக் குழுவின் ஆலோசனைக்குக் கல்வித் துறைத் தலைவர் அனுப்பிவைத்தார். அக்குழு, அவ்வறிக்கையை ஆராய்ந்து, அத்திட்டத்தின் முக்கியக் கொள்கைகளுக்கு ஒப்புதலளித்தது. அரசாங்கம் அத் திட்டத்தை ஆதரித்துப் பொருளுதவி செய்யுமெனத் தாம் நம்புவதாக அக்குழு, தெரிவித்தது.

முன்பு ஏற்படுத்திய கல்லூரிகளையும், நன்கு முடிக்கப்பெற்ற எல்லாக் கட்டிடங்களையும், இருபதுலட்சம் ரூபாயையும் நன்கொடையாகத்தரத் தாம் முன்வருவதாகவும், அவற்றின் அடிப்படையில், பல்கலைக் கழகம் ஆக்க வேண்டுமென்றும் அண்ணுமலை வள்ளல் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தார்கள். அரசியலார் இவ் வள்ளற் பெருமானுடைய பெருந்தகைமையைப் பாராட்டினர். வைப்புப் பொருளாக இருபது லட்சம் ரூபாயும், கட்டிடங்கள் கட்டுவதற்காக ஏழரை லட்சம் ரூபாயும், ஆண்டுதோறும் உதவித் தொகையாக ஒன்றரை லட்சம் ரூபாயும் வழங்க அரசாங்கத்தாரும் இசைந்தனர். அப் பல்கலைக் கழகம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் என்றும், அதன் சார்பாக உண்டாகும் நகரம், அண்ணுமலை நகர மென்றும் எந்நாளும் வழங்கப் பெறுமெனவும் அரசாங்கத்தார் உறுதி கூறினர். இச் செய்தி கேட்டுத் தமிழ்மக்கள் எல்லோரும் ‘வாழ்க அண்ணுமலை வள்ளல், வளர்க அண்ணுமலைப் பல்கலைக் கழகம்’ என வாயார வாழ்த்தினர். வள்ளல் அப்போது வழங்கிய தொகையும், கட்டிட மதிப்பும் நாற்பது லட்சம் ரூபாய்க்கு மேலாகும்.

சென்னைச் சட்ட சபையில், இப் பல்கலைக் கழகம் பற்றிய திட்டம் வந்தபோது, அது, விரும்பி வரவேற்கப்பெற்றுச் சட்டமாக்கப்பட்டது. அப்போது முதல் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள், எஸ். சத்தியமூர்த்தி அவர்கள், சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் முதலியோர் பல்கலைக் கழகத் திட்டத்தை ஆதரித்துப் பாராட்டிப் பேசினர். பனகல் அரசர் அவர்கள், இந்த நன்கொடையைத் தனிப்பட்டவர் செய்யும் நன்கொடையில் மிகக் குறிக்கத்தக்கதென்று கூறினுர்கள்; ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களின் பெருந்தன்மையும், உயர்குணமும் இந்தியாவிலேயே மிக மேம்பட்டன வென்றும், இப்படி ஒரு சிறந்த காரியத்திற்காக நாற்பது லட்சம் ரூபாய் நன்கொடை யளிப்பாரைக் காணுதல் அரிதென்றும் பாராட்டிப் பேசினுர்கள். சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள், இந்தியாவில், இப் பல்கலைக் கழகம் நிறுவிய ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் ஒப்பற்ற ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதாகத் தெரிவித்தார்கள். திரு. சத்தியமூர்த்தி அவர்கள், நிறுவியோரின் பெருங்கொடையினைப் புகழ்ந்து கூறி, உலகப் பண்பாடுகளை சந்திக்கும் ஓரிடமாக இப் பல்கலைக் கழகம் விளங்குமெனக் குறிப்பிட்டார்கள். பின்னர்ச் சட்ட சபை உறுப்பினர் அனைவராலும் ஆதரிக்கப்பெற்று, இப் பல்கலைக்கழகச் சட்டம், சென்னைக் கவர்னராலும், இந்திய அரசப்பிரதிநிதியாலும் ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

1929-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், பல்கலைக்கழகம் தொடங்குவதென்று முடிவு செய்யப்பெற்றது. வகுப்பறைகளுக்கும், ஆசிரியர் இருத்தற்குரிய இடங்களுக்கும் மிக விரைவில் ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. செனெட், சிண்டிகேட், அக்கடமிக் கௌன்சில் ஆகியவை 1929-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ஆம் தேதியிலிருந்து பணிபுரியத் தொடங்கின. செனேட்டைத் தொடங்கி வைக்கும்படி சென்னை மாகாணக் கவர்னர் கோஷன்பிரபு அவர்களைக் கேட்டுக்கொண்ட ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள், ஆற்றிய சொற்பொழிவில், "சென்னை அரசாங்கம் தனிப்பட்டவர்கள் செய்யும், பொது நன்மைக்கான முயற்சிகளுக்கு ஊக்கம் அளிப்பதும், தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை உலகறியச் செய்ய வேண்டும் என்னும் அவாவும் இப் பல்கலைக் கழகம் தோன்றுதற்குக் காரணமாகும்," என்று குறிப்பிட்டார்கள்.

இராசா அவர்களின் எண்ணம் போலப் பல்கலைக் கழகம் பல்லாற்றானும் நன்கு வளர்ந்து வருகிறது. மெய்ப்பொருள், வரலாறு, பொருளாதாரம், சமூக கிராம நலம், கணிதம், புள்ளி விவரம், பௌதிகம், இரசாயனம், தாவரம், விலங்கு நூல், விவசாயம், நிலநூல், ஆசிரியப் பயிற்சி, இசைப் பயிற்சி, பொறியியல், இரசாயனத் தொழிற் கல்வி, ஓவியம், நாடகம், மாணவர் படைப் பயிற்சி ஆகியவைகளும், தமிழ், ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளும் இப்போது கற்பிக்கப் பெறுகின்றன. பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. விலங்குநூற் பகுதி, பல்கலைக் கழகத்தினின்றும், அரசாங்கத்தினின்றும் பொருளுதவிபெற்று, விலங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றைப் பறங்கிப்பேட்டையில் நிறுவியுள்ளது. விலங்கு நூற் பகுதியில் உள்ள பொருட்காட்சி எல்லோரும் கண்டு மதித்தற்குரியது. பொறியியற் பகுதியும், இரசாயனத் தொழிற் கல்விப்பகுதியும் திறம்பெற்ற தொழில் வல்லார் பலரை ஆக்கி, நாட்டிற்கு உதவி வருகின்றன. விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, வளமாக உள்ளது. விவசாயத் துறையில் கத்தரிக்காயை விதையில்லாமல் உற்பத்தி செய்யும் முறையும், ஜப்பான் முறைப்படி பயிர் சாகுபடி செய்யும் முறையும் குறிப்பிடத்தக்கன. பலர் பாராட்டும் முறையில் செம்மையாக, மாணவர்களுக்குப் படைப்பயிற்சி இங்கே அளிக்கப் பெறுவதும் குறிப்பிடத் தக்கது. தமிழையும், இசையையும் பற்றிய குறிப்புக்கள் தனியே இம் மலரில் இடம் பெற்றுள்ளன. கற்றுத் துறைபோய பேராசிரியர்களும், ஆசிரியர்களுமாக நூற்றெழுபத்தைவருக்கு மேற்பட்டவர் எல்லாத் துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர் கல்வி பயில்கின்றனர். ஒரு லட்சம் நூல்கள் அடங்கிய நூல் நிலையம் ஒன்று நன்கு பயனளித்து வருகிறது. சிறந்த ஆராய்ச்சி நூல்களும் பிறவுமாக 100 வரை பல்கலைக் கழக வெளியீடுகள் வெளிவந்திருப்பது மிக வும் போற்றுதற்குரிய பணியாகும். இங்கே கல்வி பயின்ற பழைய மாணவர் பலர், பல துறைகளில் தலைசிறந்து விளங்கு வது பல்கலைக் கழகத்தின் பெருமகிழ்ச்சிக்கு உரியது.

பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட அழகிய மாணவர் இல்லங்கள் பல உள்ளன. இவற்றில் ஆயிரத்து இருநூறு மாணவர் உள்ளனர். இவை மேலும்மேலும் விரிவடைந்து வருகின்றன. மகளிர் விடுதி 80 மாணவியர் தங்குதற்கேற்றதாக உள்ளது. மாணவர் இல்லங்கள், திருவள்ளுவர் இல்லம், இளங்கோ இல்லம், கம்பர் இல்லம், பாரதி இல்லம், சேக்கிழார் இல்லம், திருவாங்கூர் இல்லம் எனப் பல பிரிவாகச் சிறந்து விளங்குகின்றன.

பல்கலைக்கழகம், கல்விக்கு ஊக்கமளிப்பதுபோலவே உடல்நலத்திற்குக் காரணமான விளையாட்டுக்களுக்கும் ஊக்கமளிக்கிறது. இங்கே பலவகை விளையாட்டுக்களும் இடம் பெற்றுள்ளன. இவைகள் எல்லாவற்றிலும் மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். கிரிக்கெட் வட்டாரங்களில் செட்டிநாட்டுக் கப் சிறந்ததொன்றாகும். விளையாடும் பகுதியைச் சார்ந்த படகு ஓட்டும் கால்வாய், குறிப்பிடத்தக்கது. சிறந்த மருத்துவ நிலையம், இங்கு நற்பணி புரிந்து வருகின்றது.

பல்கலைக் கழகத்திற்கு விருந்தினராக வருபவர்கள் தங்கு வதற்குச் சிறந்ததொரு விருந்தினர் மாளிகை உள்ளது. அண்மையில் மற்றொரு விருந்தினர் மாளிகையும் அமைக்கப் பெற்றிருக்கிறது. ஆசிரியர்களுக்கென்று பொழுதுபோக்குக் கழகம் ஒன்றும் மகளிர் பொழுதுபோக்குக் கழகம் ஒன்றும் உள்ளன. மகளிர் பொழுதுபோக்குக் கழகத்திற்குச் செட்டி நாட்டரசி மெய்யம்மைஆச்சி அவர்கள் பேராதரவு அளித்து வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பட்டமளிப்பு விழா மன்றத்திலும், கோகலேமன்றத்திலும், பல்கலைக்கழகப் பொதுப் பேரவையும், பிற மன்றங்களும் பல சொற்போர்களை நடத்துவது காணத்தகுந்த காட்சியாகும்.

இப் பல்கலைக்கழகத்தில், துணைவேந்தர்களாக இருந்து பணியாற்றிய பெரியோர்களை எண்ணி, அவர்கட்கு நன்றி கூறுதல் நம் கடமையாகும். அவர்களைப்பற்றிய குறிப்புக்கள் சில பின்வருமாறு :

துணைவேந்தர்கள்

நிறைந்த அறிவாற்றலும், ஆட்சித்திறமும் வாய்ந்தவர்களே இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்களாக விளங்கியுள்ளனர். இவ்வகையில் இப் பல்கலைக்கழகம், பெரும்பேறு பெற்றதென்றே சொல்லுதல் வேண்டும். பல்கலைக்கழகம் தோன்றியபோது மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் துணைவேந்தர் என முடிவாயிற்று. ஆனால், அவர்கள் அலுவலை மேற்கொள்வதற்குமுன், இந்திய அரசினரால், ஆப்பிரிக்காவின் இந்திய ஏஜெண்டாக நியமிக்கப்பெற்றமையால், இந்தியக் கல்வித்துறையில் சிறந்த பணியாற்றி ஓய்வுபெற்ற சர் எஸ். இ. அரங்கநாதன் அவர்கள், துணைவேந்தர் பதவியை ஏற்றார்கள். அவர்கள் இப் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகள் (1929—1935) துணைவேந்தராய் இருந்து, பல்கலைக்கழகத்தின் ஆக்கத்திற்கு அருந்தொண்டு புரிந்தார்கள்.

பின்னர், மகாகனம் வி. எஸ் சீநிவாச சாஸ்திரியார் அவர்கள், துணைவேந்தர் பதவியை ஏற்றார்கள். அவர்கள் ஆங்கிலமொழியை அழகுறப் பேசுந்திறத்தால் பெரும்புகழ் படைத்தவர்கள். அவர்கள் ஐந்தாண்டு (1935-1940) துணை வேந்தராயமர்ந்து பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தார்கள்.

பின்பு, சென்னை மாகாண அமைச்சராக இருந்து தொண்டாற்றியவர்களும், சட்டக்கலையில் வல்லுநரும், சில காலம் சென்னைக் கவர்னராயிருந்தவர்களும் ஆகிய சர் கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள், இரண்டாண்டு (1940-42) துணைவேந்தர் பதவி ஏற்றுச் சிறந்த முறையில் தொண்டாற்றினார்கள். இவர்கள் காலத்தில், அண்ணாமலை அரசரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது; சென்னை அரசாங்கத்தினிடமிருந்து ஐந்து லட்சம் ரூபாய் மூலதனமாகிய உதவித்தொகையும், முன்பிருந்ததைக்காட்டிலும் மிகுதியாக ஆண்டுதோறும் நாற்பதினாயிரம் ரூபாய் உதவித்தொகையும் பல்கலைக் கழகத்துக்குக் கிடைத்தது.

பின்னர்த் திரு. எம். இரத்தினசாமி அவர்கள், ஆறாண்டு (1942-48) துணைவேந்தராயிருந்து மிகுந்த பணியாற்றியுள்ளனர். இவர்கள், சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தலைவராகவும், சென்னைச் சட்டக் கல்லூரித் தலைவராகவும், சென்னைச் சட்டசபைத் தலைவராகவும், சென்னையில் பல அரசாங்க அலுவலகங்களுக்குப் பொறுப்பாளர்களையும் அலுவலர்களையும் தேர்ந்தெடுக்கும் குழுவின் உறுப்பினராகவும் இருந்து செய

லாற்றிப் புகழ் பெற்றவர்கள். இவர்கள் மிக முயன்று, பல்கலைக் கழக மாணவர் இல்லங்களின் நிலைகளை உயர்த்தினர். பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு வேலை தேடித்தருவதற்கும், மேற் படிப்புப்பற்றி அவர்கள் அறிவதற்கும் ஏற்ற அறிவிப்புப் பகுதி ஒன்றைப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தினர். இவர்கள் காலத்தில்தான் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் ஐந்து லட்சம் ரூபாயும், திருவாங்கூர் மகாராஜா அவர்கள் ஒரு லட்சம் ரூபாயும் பல்கலைக் கழகத்துக்கு நன்கொடை யளித்தனர்; சென்னை அரசாங்கம் இரண்டு லட்சம் ரூபாய் வழங்கியது.

திரு. இரத்தினசாமி அவர்களுக்குப் பின், சென்னை மாகாணக் கல்லூரியின் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற டாக்டர் எஸ். ஜி. மணவாளராமானுஜம் அவர்கள் துணைவேந்த ரானார்கள். இவர்கள் ஆட்சித்திறம் மிக்கவர்கள். பல்கலைக் கழகம் சிறந்த முறையில் நடைபெறவேண்டுமென்று முயன்றார் கள். இவர்களுடைய காலத்தில், மாணவர் படைப்பயிற்சி தொடங்கப்பெற்றது. ஆசிரியர்களுக்கும், ஏனையோர்களுக்கும் ஊதிய உயர்வு ஏற்பட்டது. பட்டம் பெற்ற பின்னர்ப் பயிலும் மேற்படிப்புக்கும், இரசாயனம், தாவரம், விலங்குநூல் ஆகிய வற்றில் ஆராய்ச்சிநிகழ்த்துதற்கும் இந்திய அரசாங்கம், இரண்டு லட்சம் ரூபாய் பல்கலைக் கழகத்துக்கு உதவித் தொகை யளித்தது; பட்டப்படிப்பிற்குப் பின் பயிலும் படிப்பிற்கும், தாவரம்பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துதற்கும் மீண்டும் நாற்பதி னாயிரம் ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்தது.

பின்னர், டாக்டர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் துணைவேந்தராகும் பெரும்பேற்றைப் பல்கலைக் கழகம் பெற்றது. இவர்கள், 1951-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், துணைவேந்தர் ஆனார்கள். சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் விரும்பும்போது பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென, டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் விரும்பியதை நிறைவேற்றிய பெருமை, அவர்கள் குமாரர் ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்களுக்கு உரியதாயிற்று. பேரறிஞராகிய டாக்டர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்கள், பொதுநலப் பணிகளில் தலைசிறந்து விளங்கியவர்கள். மத்திய சட்டசபையின் தலைவராக வும், இந்தியாவின் முதல் நிதியமைச்சராகவும் சிறந்த தொண் டாற்றிப் பெரும் புகழ்படைத்தவர்கள். பல்கலைக் கழகம், தன் வன்மைக்கேற்றவாறு முன்னமேயே விரிவடைந்துள்ளமையால், செட்டியார் அவர்கள் பதவியிலிருந்தபோது, அதை நன்கு ஒழுங்குபடுத்திச் சீராக்க வேண்டுமென எண்ணினார்கள்.

இவர்களுடைய காலத்தில், தமிழ் ஆராய்ச்சிப் பகுதி முன்னேற்ற மடைந்தது. சிறந்த பாடங்களைக்கொண்ட கம்பராமாயணப் பதிப்பு வெளியிடுதற்குரிய பணியை இவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவர்கள் ஆங்கிலப் படிப்பின் தரத்தை உயர்த்து வதற்குப் பெரிதுங் காரணராக இருந்தார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து பொறியியற் கல்லூரியின் செலவிற்காக ஏழு லட்சம் ரூபாய் நன்கொடையாகவும், பொறியியற் கல்லூரி மாணவர் விடுதி கட்டுதற்கு நான்கு லட்சம் ரூபாய் கால வரையறையில்லா வட்டியில்லாக் கடனாகவும் பல்கலைக் கழகத் துக்கு இவர்கள் காலத்தில் கிடைத்தது. இவர்கள், ஆசிரியர்கள், ஏனைய அலுவலாளர்கள் ஆகியோருடைய மக்களுக்குக் கட்டண மின்றிக் கல்வி பயிலுதற்கு வாய்ப்பு அளித்தார்கள்.

இவர்கள் உடல்நலங் குன்றிய நிலையில், 1953-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், டாக்டர் சர் சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்களின் தொண்டு இப் பல்கலைக்கழகத்திற்குக் கிடைப்ப தாயிற்று. இது, பல்கலைக்கழகத்தின் பெரும்பேறாகும். சர் சி. பி. இராமசுவாமி ஐயரவர்கள், உலக அரங்கில் பெரும் புகழ்பெற்றவர்கள். பல பெரும்பொறுப்புக்களை ஏற்றுச் சீரிய முறையில் நடத்தியவர்கள். சிறந்த ஆட்சியாளர், நிறைந்த கல்வி யாளர். இவர்களுடைய ஆட்சியில் கலைகள் செழிப்புற்று வளர் கின்றன. இண்டர்மீடியேட்டுக்கும், பி.ஏ. வகுப்புக்கும் இடையே ஓராண்டுக் காலமுள்ள கலை, விஞ்ஞானம், இசை, நாடகம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு படிப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். இவர்கள் காலத்தில், வெள்ளிவிழா நினைவாக, ஒரு தமிழ்ப் பேராசிரியரை ஏற்படுத்துதற்கு இந்திய அரசாங்கம், மூன்று லட்சம் ரூபாய் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியிருப்பது குறிப் பிடத் தக்கது. 1952-ல் இந்தியக் குடியரசுத் தலைவராகிய டாக்டர் இராசேந்திர பிரசாது அவர்களும், 1954 ஏப்பிரல் மாதத்தில் இந்தியாவின் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு அவர்களும் பல்கலைக் கழகத்தைப் பார்த்து மகிழ்ந்தனர்.

இராவ் பகதூர் என். விசுவநாத ஐயரவர்கள் இப் பல்கலைக் கழகந் தொடங்கிய காலத்திலிருந்து 1948-ஆம் ஆண்டுவரை இதன் பதிவாளராக இருந்து இதனுடைய வளர்ச்சி, முன்னேற் றம் ஆகியவற்றிற்குப் பெருந்தொண்டு புரிந்தார்கள். பேராசிரியர் அ. இராமநாத பிள்ளை அவர்கள் உதவித் துணைவேந்தராகவும், திரு. டி. டி. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பதிவாளராகவும் இப்போது பணிபுரிந்து வருகின்றனர்.

இப் பல்கலைக் கழகத்தின் தேவைகளுக்கெல்லாம் சென்னை அரசாங்கத்தாரும், இந்திய அரசாங்கத்தாரும் செய்துவரும்

உதவிகள் பெரிதும் பாராட்டற்பாலனவாகும். இப் பல்கலைக் கழகத்திலிருந்து கொண்டும், வெளியில் இருந்தும் இதற்குத் தொண்டுசெய்தோர் இன்னும் பலராவர். அவர்களுடைய தொண்டுகளெல்லாம் நன்றியறிவுடன் நினைக்கத்தக்கன.

இவ் வெள்ளிவிழாக் கொண்டாடும்போது, வரப்போகும் பொன்விழாவானது இன்னும் மிகச் சிறப்போடு விளங்க வேண்டும் என்னும் பெரு நம்பிக்கையோடு, மேலும்மேலும் உழைப்போமாக. இப் பல்கலைக்கழகம், சீருடனும், சிறப்புடனும், வளர்ந்து ஓங்கி விளங்குக என, உளமுவந்து வாழ்த்துவோமாக.

இப்போது இப் பல்கலைக் கழக இணைவேந்தரும், (Pro-Chancellor) பல்கலைக் கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளல், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அருந்தவப் புதல்வருமாகிய ராஜா சர் முத்தைய செட்டியாரவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, இச் சிறப்பு மலரிற் பிறிதோரிடத்தில் கூறப்பெற்றுள்ளது.

கலைக்கோயில் வாழிய!

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

நிலைமண்டில ஆசிரியப்பா

வாழிய அண்ணா மலைகலைக் கோயில்
வாழிய அண்ணா மலைப்பெயர் வள்ளல்
தண்டமிழ்க் கோயில் தலைக்கலைக் கோயில்
வண்டமிழ் வாணர் வாழுங் கோயில்
மாணவ வண்டினம் வான்கலைத் தேனுணப்
பேணுநல் அறிவிதழ் பிறங்க அவிழும்
தாமரைக் கோயில் தண்மையின் வாழிய
பூமனும் புகழ்மிகப் பொலிந்து வாழிய
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பெயர்
விண்ணா டதனினும் விஞ்சி ஓங்குக
அறிவெனும் நல்லமிழ் தளித்தே அகனொடு
புறமும் மகிழ்தரப் பொற்புற வளர்ந்தே
வெள்ளி விழாக்கொடு விளங்கி மேம்பட்டு
ஒள்ளியர் உவப்புற வளர்ந்தது காண்மின்
பொன்னின் விழாவுடன் பொருந்தி வைரம்
மன்னும் விழாவின் வளனுற வாழிய
கலைச்செல் வத்தை கவினுறத் தந்த
மலையின் மிளிரும்அண் ணாமலை வள்ளல்
பெயரும் புகழும் பெருக வாழிய
உயர்வுறும் அவன்மகன் முத்தைய உரவோன்
கிளையும் புதல்வரும் கிளர்ந்தெழுந் தின்புடன்
வாழிய பொதியின் மலையினும் வளர்ந்தே.

இராசா சர். அண்ணாமலைச்செட்டியார் வரலாறு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளல்

தமிழ்நாட்டின் தனிப்பெரும் பல்கலைக்கழகமென நாடு முழுதும் பாராட்டப்பெறும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நாட்டுக்கும், மொழிக்கும் நலம் பல செய்து, இன்று வெள்ளிவிழாக் கொண்டாடப்பெறும் சிறப்பெய்தியுள்ளது. இந்நன்னாளில் இதனை நிறுவிய பெருங் கொடைவள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய அரும்பெரும் பண்புகளையும், செயற்கருஞ் செயல்களையும் எண்ணுதல், பொதுவாக எல்லோருக்கும் சிறப் பாக ஒவ்வொரு தமிழ்மகனுக்கும் பெருமகிழ்ச்சி தருவதாகும்.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் கானாடு காத்தான் என்னும் நகரில், தனவணிகர் மரபில், அறம்பல புரிந்த செல்வராகிய முத்தையச் செட்டியார் அவர்களின் குமார ராக 1881-ஆம் ஆண்டில் பிறந்தவர்கள். இவர்கள் தம் ஆட்சித் திறத்தாலும், அறிவு நுட்பத்தாலும், பேருழைப்பாலும் தம் முப்பதாம் ஆண்டுவரை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பலதிறப்பட்ட தொழில் துறைகள் வாயிலாகப் பெரும் பொருள் ஈட்டினார்கள்.

பொதுநலப்பணிகள்

இவ்வாறு ஈட்டிய பெரும் பொருளைக்கொண்டு தாமும், தம்மைச் சார்ந்தவருமே இன்பவாழ்வு நடத்துதல் அமையுமென இவர்கள் கருதினாரல்லர். பொதுமக்களுக்குப் பல்லாற்றானும் இயன்ற உதவிகள் செய்தல் வேண்டுமென எண்ணினார்கள். அந்நிலையில், தம் ஊருக்கு அண்மையிலுள்ள காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப்பதவி இவர்களை நாடிவந்தது. பொதுநலப் பணிபுரிதற்கு இது ஒரு வாய்ப்பாகுமென எண்ணி, இவர்கள் அப்பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள். மூன்றாண்டுகள் தலைவராயிருந்து அந்நகரத்திற்குப் பல நன் மைகள் செய்தார்கள். அக்காலத்தில் பொதுமக்கள் இவர்களைத் தலைவராகக் கருதினும் இவர்கள் தம்மைப் பொதுநலத் தொண் டராகவே கருதிப் பணிபுரிந்தார்கள்.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டிற் பிறக்கும் நன்மக்களைப் பொறுத்திருக்கிறது. தாய்மார்கள் உடல்வளமும் உள்ளக்

களிப்பும் உடையவர்களாயிருந்தாலன்றி அவர்களிடம் நன்மக்களை எதிர்பார்த்தல் இயலாது. ஆகவே, பிள்ளைப்பேற்றின் போதும், பிற காலங்களிலும் பெண்டிர்களுக்கு வருத்தமும், கவலையுந் தோன்ருதவாறு மருத்துவமுதலான வசதிகள் செய்து கொடுத்தல், ஒரு நாடு நலம்பெறச் செய்யும் சிறந்ததோர் அறமாகுமென நம் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் எண்ணினுர்கள். எண்ணியவாறே தம் ஊரில் மூன்றுலட்சம் ரூபாய் செலவுசெய்து ஓர் அறப்பணிபுரியும் மருத்துவசாலை அமைத்தனர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான தாய்மார்கள் அம்மருத்துவசாலையில் அழகிய நன்மக்களைப் பெற்றெடுத்திருக்கின்ருர்கள். பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் அம்மருத்துவசாலையை நிறுவிய அண்ணுமலை வள்ளலை வாயார வாழ்த்துகின்றனர். இது, சென்னை மாகாணத்திலேயே சிறந்ததொரு மருத்துவசாலையாகும்.

பிறநாடுகளில் எல்லாத் துறைகளிலும் பெண்டிர் ஆடவருடன் சமமாக வாழ்க்கை நடத்துகின்றனர். பெண்டிர் நாட்டுப் பணிகளிலும் பங்குகொள்கின்றனர். வீட்டரசிகளாகவும் விளங்குகின்றனர். இம்முறை நம் நாட்டில் சில நூற்ருண்டுகளாகத் தடைப்படுத்தப்பட்டது. இத்தவறான நெறியை விடுத்து மாதரும் மைந்தரைப்போல உடற்பயிற்சிக்கான விளையாட்டுக்கள் விளையாடவும், உலகியலறிவு பெறவும், நாகரிக மக்களுடன் நன்கு கலந்து பழகவும் வேண்டுமென உணர்ந்த அண்ணுமலை வள்ளல் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் இரண்டுலட்சம் ரூபாய் செலவுசெய்து "வெலிங்டன் கிளப்" என்னும் மகளிர் மன்றம் ஒன்று நிறுவினுர்கள். இது தக்க இடத்தில் அமைந்திருப்பதனுல், மகளிர் இனத்திற்கு நலம் பயக்கும் பல பணியாற்றிவருகின்றது. சிதம்பர நகர மக்கள் பொதுக்கூட்டம் முதலியன நடத்துதற்குப் போதிய இடமும், கட்டிடமுமில்லாமல் தயக்கமுறுதலை யறிந்து, விரிந்ததோரிடம் வாங்கி, அதன்கண் பூங்காவையும், பொதுமன்றத்தையும் இவர்கள் ஆக்கித்தந்தார்கள். இது ராஜா அண்ணுமலை டவுன் ஹால் என வழங்கப்பெறுகின்றது. அண்ணுமலை வள்ளல் அவர்கள், மதுரைக் கல்லூரிக்கு ஐம்பதினுயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள இடம் வாங்கிக்கொடுத்து, அதிற் கட்டிடம் கட்டுதற்கும் பொருளுதவி செய்தார்கள். மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு மாணவர் விடுதியொன்று கட்டிக்கொடுத்தார்கள்; பசுமலையிலுள்ள அமெரிக்க மிஷன் உயர்நிலைப் பள்ளிக்கு அவ்வப்போது செய்த உதவிகள் பலவாகும்; திருச்சிராப்பள்ளியிலுள்ள தேசிய உயர்நிலைப் பள்ளி, சென்னையிலுள்ள பின்னத்

தூர்ச் சுப்பிரமணிய ஐயர் உயர்நிலைப்பள்ளி, இராமகிருஷ்ண கல்வி நிலையம், சேவா சதனம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், டில்லியிலுள்ள இர்வின் பாடசாலை, மகளிர் கல்விக்கழகங்கள், கொழும்பு பர்மா இவற்றிலுள்ள கல்விநிலையங்கள் ஆகியவற்றிற்குப் பொருளுதவி செய்துள்ளார்கள். டோராடூனிலுள்ள இந்தியப் பொதுமக்கள் கல்விச்சாலைக்குச் சற்றேறக்குறைய ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கினார்கள். சாந்தி நிகேதனத்திற்கு இரண்டாயிரம் புத்தம்புதிய தமிழ்நூல்களை அன்பளிப்பாகக் கொடுத்துதவினார்கள். தமிழ்க் கலைக்களஞ்சிய வெளியீட்டிற்குப் பதினாயிரம் ரூபாய் அளித்தார்கள். இன்னும் எத்துணையோ சங்கங்கள், சபைகள், வாசகசாலை, பாடசாலைகள் முதலியவற்றிற்கு வழங்கிய தொகைகள் வரம்பிலவாகும். சிதம்பரத்தில் கோவிந்தராசப்பெருமாள் கோயில் திருப்பணியையும், இளையாற்றங்குடியில் அம்மன் கோயில் திருப்பணியையும் இவர்கள் செய்ததோடு, மேலும் பல திருக்கோயில்களுக்கும் உதவிசெய்துள்ளார்கள்.

பட்டம், பதவிகள்

இவர்கள் காரைக்குடி நகராண்மைக்கழகத் தலைவராயிருந்து பணியாற்றியபோது "ராவ்பகதூர்" என்ற பட்டத்தையும், 1922, 1923-ஆம் ஆண்டுகளில் முறையே "திவான் பகதூர்", "சர்" என்ற பட்டங்களையும் இவர்களுக்கு அரசாங்கத்தார் வழங்கிப் பெருமைபடுத்தினர். 1929-ல் தகுதியான பட்டம் ஒன்று இவர்களுக்குக் கிடைத்தது. அதுதான் பரம்பரையாக வரும் "இராசா" என்னும்பட்டமாகும். இப்பட்டம் இவர்களைச் சேர்ந்து பெருமைபெற்றது என்றே கூறுதல்வேண்டும். மேலும் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டமன்றத்தில் வாழ்நாள் உறுப்பினராக இருந்த இவர்கள் செய்துள்ள கல்விப்பணியைப் பாராட்டி, அப் பல்கலைக்கழகம், 1932-ல் எல். எல். டி. என்ற சட்ட டாக்டர் பட்டத்தை இவர்களுக்கு வழங்கியது. 1942-ல் நடைபெற்ற பன்னிரண்டாவது பட்டமளிப்புவிழாவில், அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்ட மன்றத்தார், டி. லிட். என்ற இலக்கிய டாக்டர் பட்டமளித்து இவர்களைப் பாராட்டினர். 1916-ஆம் ஆண்டுமுதல் மூன்றுஆண்டுகள் சென்னைச் சட்டசபை உறுப்பினராகவும், 1921-ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் டில்லி அரசாங்க சபை உறுப்பினராகவும் இவர்கள் இருந்து நாட்டுக்குச் செய்த உயர்ந்த தொண்டுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இந்திய இம்பீரியல் பேங்கின் கவர்னராக இவர்கள் பத்து ஆண்டு பணியாற்றியுள்ளார்கள்.

பல்கலைக்கழகத் தோற்றம்

"மக்கள் வாழ்க்கை தனித்தமுறையில் திருத்தமுறுதல் இல்லை; அறிஞர் பலருடன் அடுத்தடுத்துப் பழகுதலும், அயலிடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள அருமை பெருமைகளைக் காண்டலும் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாகும். சிறுபான்மையினரான ஆங்கிலேயர் கல்வி, வாணிகம், ஆட்சித்திறன் முதலியவற்றில் பிறநாட்டாரினும் மேன்மையுற்று விளங்குகின்ற நுட்பங்களை அறிதல்வேண்டும்" என இவர்கள் அவாக்கொண்டு, காரைக்குடி நகராண்மைக்கழகத் தலைவராயிருந்த அக்காலத்தில், இங்கிலாந்துக்குச் சென்று இலண்டன் மாநகரில் தங்கினார்கள். அப்போது (1911-ல்) ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு அங்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவிற்கு இவர்கள் சிறப்பாக அழைக்கப் பெற்று, அவ்விழாவிற் கலந்துகொண்டார்கள். அங்கே தங்கியிருந்தபோது ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று அவற்றின் அமைப்புக்களையும், நடைமுறைகளையும் நன்கு கவனித்தார்கள். அவை இவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. இந்நினைவுகளுடன் இந்தியாவிற்கு வந்தார்கள். இங்கிலாந்திலிருந்து திரும்பியது முதல் அத்தகைய பல்கலைக்கழகம் நம் நாட்டில் உண்டாதல் வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களாயிருந்தார்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் இப் பெருந்தகையாளரின் உள்ளமாகிய நன்னிலத்தில் அழுந்திப் பதிந்த அவ்வுயரிய நோக்கமாகிய நல்வித்தானது, நாளடைவில் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து முழுமரமாகிப் பூத்துக் காய்த்துப் பயன்விளைக்கத் தொடங்கிற்று. இது, தமிழகம் செய்த தவப்பயனென்றே கூறுதல் வேண்டும். இவர்கள் முதல்தரக் கல்லூரி ஒன்று நிறுவுதற்கு முதலில் முயன்றார்கள். பாண்டிநாட்டின் தலைநகரமும், முத்தமிழ் வளர்ந்த முதலிடமுமாகிய மதுரை மாநகரமே கல்லூரி நிறுவுதற்குத் தக்க இடமெனத் தினைந்து, காலந்தாழ்க்காது அந்நகர்க்கண் விரிந்த நிலமும் வாங்கினார்கள். சில காரணங்களால் அவ்வெண்ணம் மாற்றப்பட்டமையால், தாம் வாங்கிய நிலத்தையும், கட்டிடம் கட்டுதற்கு வேண்டும் பொருளையும் மதுரைக் கல்லூரிக்கு வழங்கிவிட்டுச் சிதம்பரத்தை நோக்கினார்கள்.

தம் தந்தையார் அவர்களும் தமையனார் திவான்பகதூர் இராமசாமி செட்டியார் அவர்களும் பொதுநலப் பணிகள் புரிந்த இடம் சிதம்பரமாகும். ஆதலால், அந்நகரத்திலேயே தாமும் கல்லூரி அமைத்தல் சாலப் பொருத்தமுடையதென இவர்கள் முடிவு செய்தார்கள். தமையனார் திவான்பகதூர் இராமசாமி செட்டியார் அவர்கள் 1918-ல் இறையடி சேர்ந்த

மையால், அவர்கள் பெயரால் நடைபெற்றுவந்த உயர்நிலைப் பள்ளியைப் பாதுகாக்கும் பொறுப்பும் இவர்கள் பாலதாயிற்று. ஆதலின் அவ்வுயர்நிலைப்பள்ளியையே முதல்தரக் கல்லூரியாக்க முயன்றார்கள். 1920-ஆம் ஆண்டில் அப் பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்பும் தொடங்கப்பெற்றது. தக்க ஆசிரியர்களாலும், மாணவர்களாலும், நூல்நிலையம் முதலான பிற அங்கங்களாலும் கல்லூரி செவ்வனே நடைபெற்றது. ஆயினும் அக்கல்லூரி ஊர் நடுவில் அமைந்திருந்தமையால், பிற்காலத்தில் அதனை விரிவு படுத்தற்குப் போதிய இடம் பெறுதல் அரிதெனை உணர்ந்தார்கள். விரிந்த இடந்தேடும் எண்ணம் மேன்மேல் வளர்ந்தது. அவ்வெண்ணத்தின் விளைவாகத் தில்லையின் எல்லையில் உள்ளதும், விரிந்த நிலப்பரப்பு உடையதும் ஆகிய திருவேட்களமே கலைவளர்ச்சிக்குத் தகுதியான இடமென நன் முடிவு செய்தார்கள். வேண்டும் கட்டடங்களும், அமைப்புக்களும் விரைவில் நிறைவேறின. அங்கே நடைபெற்ற கல்லூரி தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக வளர்ச்சிபெற்றது. தனித்தனியாக இருந்த தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, இசைக் கல்லூரி ஆகியவை பல்கலைக் கழகத்தோடு இணைந்தன. இப் பல்கலைக்கழகத்துக்கு அண்ணாமலை வள்ளல் வழங்கிய தொகை ஏறத்தாழ ஐம்பது லட்சம் ரூபாயாகும். இதனை நிறுவுதற்கும், இதன் வளர்ச்சிக்கும் இராசா அவர்கள் மேற்கொண்ட பேருழைப்பு விலைமதிக்க இயலாததாகும். இவர்களுக்கு முன்னும், இவர்களுக்குப்பின் இன்றுவரையும் ஆசிய நாடுகளில் தனியாக ஒருவர் பல்கலைக் கழகம் நிறுவவில்லை. இப்பல்கலைக் கழக வரலாறும், இவர்கள் வரலாறும், பிரிக்க இயலாதவாறு பின்னிக் கிடக்கின்றன. என்றும் நின்று நிலவும் இவர்களின் புகழ் வடிவாக இப் பல்கலைக் கழகம் காட்சி தருகின்றது. இதன் வரலாறு இச் சிறப்பு மலரில் பிறிதோரிடத்தில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது.

தமிழ்ப்பற்று

அண்ணாமலையரசர் இளம் பருவந் தொட்டே தேவார திருவாசகங்களிலும் திருக்குறளிலும் அழுத்தமான பற்றுடையவர்கள். பல்கலைக்கழகந் தொடங்குதற்கு முன்பே மீனாட்சி தமிழ்க் கல்லூரி நிறுவிப் பல மாணவர்களுக்கு உண்டியும், உறையுளும் உதவி, அக்கல்லூரியில், தமிழ் வித்துவான் வகுப்பில் அம் மாணவர்களைப் பயிலச் செய்தனர். இவர்கள், அத் தமிழ்க் கல்லூரிக்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களைத் தலைவராக இருக்கச் செய்தது இங்கே குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகம் தொடங்கியபின்

அதல் தமிழுக்கு முதன்மையிடங் கொடுக்க வேண்டுமெனும் நோக்கத்தால் தமிழ்ச் சிறப்பு வகுப்பும் (பி. ஏ. ஆனர்ஸ்) உண்டாக்கினார்கள். தமிழ் வடமொழி ஆசிரியப்பயிற்சிக் கல்லூரி நிறுவி, அதிற் பயில்வோர்க்கும் பொருளுதவி செய்தார்கள். மேலும், தமிழ்நாட்டில் தமிழ்ப்பேரறிஞராய்ச் சிறந்தவர்களையே தெரிந்தெடுத்துத் தமிழ்ப்பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணியாற்றச் செய்தார்கள். மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களும் தமிழ் நாட்டின் இரு கண்மணிகள்போல் விளங்கியவர்கள். ஆதலின், அவ்விரு பெருமக்களுக்கும் தமது கையாற் பொன்னாடை போர்த்துப் பெருமைப் படுத்தினார்கள். தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று பல்கலைக்கழகச் செனெட் சபையின் தொடக்கவிழாவில் ராஜா அவர்கள் கூறியது ஒன்றே இவர்களின் தலையாய தமிழ்ப்பற்றிற்குச் சிறந்த சான்றாகும்.

தமிழ்இசை இயக்கம்

தமிழிசை யென்பது, தமிழ்மொழியில் அமைந்த பாடல்களோடு இயைத்துப் பாடப்பெறும் இசையாகும். தமிழ் மொழி எக்காலத்தில் தோன்றியதோ அக்காலந் தொட்டே தமிழிசையும் வழங்கி வருகிறது. தமிழ்மொழியினை இயல் இசை நாடகம் என முப்பெரும் பிரிவுகளாக்கி அவற்றுள் இசைக்கு நடுவிடங் கொடுத்து நம் முன்னையோர் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்து வந்தனர். எத்தனையோ இசை இலக்கணங்களும், ஆயிரக் கணக்கான இசைத்தமிழ்ப் பாடல்களும் இருந்தன முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரம் இன்றும் உள்ளது. அதன்கண் இசைநுட்பங்கள் பலவும், இசைக் கருவிகளின் இயல்புகளும் காணப்படுகின்றன. தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருவிசைப்பா, திருப்புகழ் முதலானவை தமிழ்இசைப் பாடல்களேயாகும். பிற்காலத்து முத்துத் தாண்டவர், அருணசலக் கவிராயர், இராமலிங்க அடிகளார், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை முதலான இசையறிஞர் பலர் பாடிய இசைப்பாட்டுக்களும், பதங்களும் பலவுள்ளன. இவ்வாறிருப்பவும், நம்நாட்டு இசைவாணர்கள், வேற்றுமொழிப் பாடல்களையே பெரும்பாலும் இசையரங்குகளிற் பாடிவந்தனர். தமிழ்ப்பாடல்கள் சில, துக்கடாக்களாக இறுதியிற் பாடப்பெற்றன. இந்த இழிநிலையை மாற்றவேண்டி நம் அண்ணாமலையரசர், தமிழிசை இயக்கத்தைத்

தொடங்கினார்கள். "தமிழ் நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் பெரும்பான்மையராய்க் குழுமியிருக்கும் இடங்களில் தமிழிசைப் பாடல்களே பாடப்பெற வேண்டும்; தாய்மொழிப் பாடல்களே மக்களுக்குப் பொருள் உணர்ச்சியைத் தந்து உளம் கவர்ந்து இன்புறுத்தத்தக்கன வாகும்" என்ற நியாயமான எண்ணம் ராஜா அவர்களின் உள்ளத்தில் பதிந்தது; இது, தமிழ் மக்களின் பெரும் பேறுபிற்று. ராஜா அவர்களின் கொள்கையைத் தமிழ்மக்கள் அனைவரும் உவந்து வரவேற்றுப் பேராதரவு தந்தனர். டாக்டர் சர். ஆர் கே சண்முகஞ் செட்டியார் அவர்கள் முதலிய பேறிஞர் கள் ஒத்துழைத்துப் பெருந்துணை புரிந்தனர். எவ்விதமான நல்லதோரியக்கத்தையும் சிலர் எதிர்ப்பது இயற்கைதானே. அவ்வாறே இதற்கும் எதிர்ப்பு இருந்தது. தமிழில் கீத வர்ணங்களில்லை யெனவும், இசைக்கு மொழி அவசியமன்று எனவும் எதிர்ப்பாளர் கூறினர். அவர்களுக்குத் தக்கவாறு மறுமொழி கூறியும், தமிழிசை மாநாடுகள் கூட்டியும், சிறந்த தமிழிசைப் பாடல்களுக்குப் பரிசுகள் வழங்கியும், கீத வர்ணங்கள் இசையிலக்கணங்கள் முதலான தமிழிசைப் பாடற்றொகுதிகள் பலவற்றைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வெளிப்படுத்தியும், பல்கலைக்கழகத்தில் தமிழ் இசைப் பாடல்களைக் கற்பிக்கச் செய்தும், ஆங்காங்குத் தமிழிசைப் பள்ளிகள் அமைக்க உதவியும், சென்னையில் தமிழிசைச் சங்கம் நிறுவிப் பல மாணவர்களுக்குத் தமிழிசை கற்பித்துப் பட்டம் வழங்க ஏற்பாடு செய்தும தமிழிசைக்கு ராஜா அவர்கள் புத்துயிர் அளித்தார்கள்.

"தத்தளித்து நின்ற தமிழிசைச் செல்விக்குப் புத்துயிர் ஊட்டிய நற்புண்ணியவான்" என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் இவர்களைப் பாராட்டிப் பாடியிருப்பது இங்கே நினைக்கத்தக்கது. இப்போது, சிறந்த முறையில் அமைக்கப்பெற்றுச் சென்னை நகருக்கு அணியாக விளங்கும் அண்ணாமலை மன்றம், நம் அண்ணாமலை வள்ளல் தமிழிசை வளர்ச்சிக்குச் செய்த அரும்பெரும் தொண்டுகளை நினைவூட்டித் தமிழிசைஇயக்கத்தில் அவர்கள் பெற்ற பெருவெற்றியின் அழியாச் சின்னமாகத் திகழ்கின்றது ராஜா அவர்களின் குமாரர்களாகிய ராஜா சர் முத்தையச்செட்டியார் அவர்களும் மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும் அன்று முதல் இன்றளவும் தமிழ் இசை வளர்ச்சிக்கு இடையறாது செய்துவரும் அரும்பெரும் தொண்டுகள், தமிழ்மக்கள் உள்ளங்களில் நிலையான இடம்பெற்றுள்ளன. எனவே, நம் அண்ணாமலை அரசர், தம் குடும்பத்தையே தமிழ் இசைத் தொண்டாற்றச் செய்திருக்கிறார்கள். தமிழிசை வளர்ச்

சிக்காக, அண்ணாமலை அரசர் அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் வழங்கியிருக்கும் தொகை, மூன்று லட்சம் ரூபாய்க்கு மேலாகும்.

அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா

ராஜா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, 28-9-1941-ல், செட்டிநாட்டில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமையம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார், 1200 பக்க அளவில் ஒரு நினைவு மலரை ராஜா அவர்களுக்கு வழங்கித் தம் நன்றியறிவைப் புலப்படுத்திக் கொண்டார்கள். அம்மலரில், அறிஞர் பெருமக்கள் பலரின் வாழ்த்துரைகளும், பாடல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நிறைந்துள்ளன. அவ்விழாவில் ராஜா அவர்கள் பலவகை அறங்களுக்காக மூன்றரை லட்சம் ரூபாய் வழங்கினார்கள்.

இவ்வாறாகப் பல பொதுநலப் பணிகளுக்கும் ராஜா அவர்கள் வழங்கிய தொகை, ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேலாகும்.

குணநலங்கள்

இனி நம் அண்ணாமலை வள்ளலின் குணநலங்களைப்பற்றி ஒரு சிறிதேனும் கூறாதுவிடின் இவ்வரலாற்றுக் குறிப்பு நிறைவெய்தியதாகாது. ராஜா அவர்களின் குணநலங்களை அறிந்து, அவற்றுள் சிலவற்றையேனும் மேற்கொள்வோர், தம் வாழ்வில் உயர்வெய்துவர். ராஜா அவர்கள் நாள்தோறும் வைகறையில் துயிலுணர்ந்து நீராடி, இறைவழிபாடு செய்து, செயலாற்றத் தொடங்குவார்கள். எழுதவேண்டுங் கடிதங்களையெல்லாம் அவ்வப்போதே எழுதி முடிப்பார்கள். காலையில் தோட்டத்தில் உலாவுதலை ஒழுங்கான உடற்பயிற்சி முறையாகக்கொண்டு, அதனைத் தவறாது செய்வார்கள். உணவுநேரந் தவிர இரவு படுக்கைக்குச் செல்லும்வரையில் கருமமே கண்ணாயிருந்து, கடமைகளைச் செவ்வையாகச் செய்து முடிப்பார்கள். வேலை மிகுதியாயிருந்தால், உண்ணும்போதுங்கூட எழுத்தாளர் ஒருவரை அருகில் இருக்கச்செய்து, அவருக்குச் செய்தி அறிவித்துக் கொண்டே உண்பார்கள். இரவு படுக்கைக்குச் செல்லும் போதும் குறிப்பேடும், எழுதுகோலும் பக்கத்தில் இருக்கும். அடுத்தநாளிற் பார்க்கவேண்டியவர் பெயர்களையும், செய்ய வேண்டுங் காரியங்களையும் அக் குறிப்பேட்டிற் குறித்துவைத்துக்கொள்ளுவார்கள்.

நண்பர்களை வரவேற்று உபசரிப்பதில் இவர்களுக்கு மிக்க விருப்பம் உண்டு. குறித்த நேரத்திற் குறித்த செய்தியைப்

பேசிமுடித்துக்கொள்வார்கள். பயனில்லாதவற்றைப் பேசவும் கேட்கவும் ஒருசிறிதும் விரும்பமாட்டார்கள். இவர்களின் வாழ்நாள் ஒரு நொடிப்பொழுதும் வீணாகக் கழிந்ததில்லை. இவர்கள் இவ்வாறு காலத்தைப் பொன்போலப் போற்றிப் பயன் படுத்தியதனாலேதான் தம் பங்குக்குக் கிடைத்த சில லட்சக் கணக்கான பொருளைப் பல கோடிக்கணக்காக வளர்க்கவும், பிறர் நினைத்தற்கும் அரிய பல்கலைக்கழகம் நிறுவுதல் முதலிய பெரிய செயல்களைச் செய்யவும் இயல்வதாயிற்று.

சிலர் தம்முடைய ஆற்றலுக்கு மேற்பட்ட செயலையும் செய்வேமென எளிதாகச் சொல்லுவர். சொல்லியவண்ணம் செய்துகாட்டல் மிக அரிதாகவே இருக்கும். இதற்கு மாறான நிலையில் ராஜா அவர்கள் விளங்கினார்கள். இவர்கள் ஒன்றனைச் செய்வதாக யாவரிடத்தும் எளிதிற் சொல்லமாட்டார்கள். சொன்னால் அது எத்துணை அரியதாயினும் அதனைச் செய்து முடிக்காமல் விடுவதில்லை. ஆகவே சொல்லுதல் அரிது; செய்தல் எளிது என்பது இவர்கள்பாற் காணப்பெற்றதோர் சிறந்த பண்பாகும். நினைவாற்றல் இவர்களிடம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. இது எல்லோருக்கும் வாய்த்தல் அரிது. சிலர் பழைமை ஒழுக்கங்களில் அழுந்திய பற்றுவைத்துப் புது மையை அறவே வெறுத்தொதுக்குவர். வேறு சிலர் புதிய நாகரிகங்களில் மோகங்கொண்டு, பழைமையை அறவே கைவிட்டிருப்பர். வள்ளல் அண்ணாமலையரசர், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு, பழைமை நலமும், புதுமை எழிலும் தழுவி யொழுகும் பண்பாடு உடையவராக இருந்தார்கள். பர்மாப் பிரிவினையின்போதும், செய்கோனில் தனவணிகர் சிலர் நாடு கடத்தப்பட்டபோதும் அவர்களின் நலம் பேணுதற்காக இரண்டாம் முறையாக ஐரோப்பிய நாட்டிற்கு ராஜா அவர்கள் சென்று அவர்களுக்கு உதவிசெய்தது, இவர்களின் பெருந்தன்மைக்கு ஒரு நல்ல சான்றாகும்.

வாழ்க்கையின் குறிக்கோள்

"ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தினந்தோறும் வணங்குவேன்; அண்ணாமலை சருவகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொருநாளும் சிந்திப்பேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்கவேண்டுமென்பது எனது ஆவல். ஈட்டலும் காத்தலும் வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை" எனத் தம் கையால் எழுதிவைத்தபடியே இறுதிநொடிப்பொழுது வரையும் செய்கையிற் கடைப்பிடித்து ஒழுகிய திறமை, இவர்களுக்கே உரிய சிறப்பியல்பாகும்.

இத்தகைய அறிவாற்றலும், குணநலன்களும் வாய்க்கப் பெற்ற ராஜா அவர்கள் இருபதாம் நூற்றுண்டு இந்திய வரலாற்றில் தன்னேரில்லாத தனிப்பெருந் தலைவரெனப் பொன்னெழுத்துக்களால் பொறித்துவைக்கத் தக்கவர் ஆவார்கள். இவர்களின் பெரும்புகழ் அண்ணுமலைப் பல்கலைக்கழக வடிவாயும், தமிழிசை வடிவாயும், இவர்கள செய்த பிற பல அறங்களின் வடிவாயும் இவ்வுலகம் உள்ளளவும் நின்று நிலவும் என்பது திண்ணமாகும்.

இராச குடும்பம்

இவர்களுக்குப்பின் அண்ணுமலைப் பல்கலைக்கழக இணை வேந்தராக விளங்கும் இவர்களின் முதற் குமாரர் ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்களின் வரலாற்றுக்குறிப்பு, இச் சிறப்புமலரில் பிறிதோரிடத்தில் உள்ளது. அண்ணுமலை அரசரின் இரண்டாவது குமாரரும், 1950—51-ஆம ஆண்டில் சென்னை நகர மேயராகத் திகழ்ந்தவருமாகிய இராமநாதன் செட்டியார் அவர்களையும், அண்ணுமலையரசரின் மூன்றுவது குமாரரும், இப்போது சென்னை நகர மேயராக விளங்குகின்றவர்களுமாகிய சிதம்பரஞ் செட்டியார் அவர்களையும் தமிழ்நாடு நன்கு அறியும். ராஜா அவர்களின் குடும்பம் மேயர் குடும்பம், என்று பாராட்டத்தக்க, பிறர்க்கில்லாத பெருமையைப் பெற்றிருக்கிறது. மேற்குறிப்பிடப்பெற்றவர்களும், இக்குடும்பத்திலுள்ள குமாரராஜா முத்தையச் செட்டியார் அவர்கள் முதலியோரும், வழிவழி வருவாரும் நாட்டுக்கு நலம் பல புரிந்து, நீடூழிவாழ இறைவன் அருள்புரிவாஞக.

வெள்ளிவிழா வாழ்த்து

[திரு. நாஞ்சில். கா. கணபதி.]

சீருயரும் வணிகர் நலம் யாவும் பெற்றுச்
 செழுங் கலைகள் பல கண்டு தேர்ந்த செல்வன்
பேருயர் அண்ணு மலையாம் வள்ளல் நன்கு
 பெருமையுறப் பல்கலைதேர் கழகம் கண்டான்
பாருயரும் அக்கழகம் பலரும் போற்றப்
 பணியாற்றிக் கால்நூற்றுண் டெய்தப் பெற்றுச்
சீருயர வெள்ளிவிழாச் செய்தல் கண்டு
 தில்லைநட ராசனருள் செய்கின் றுனல்.

இராசா சர். முத்தையச்செட்டியார் வரலாறு*

செட்டிநாட்டு ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்கள், 1948-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் (Pro-Chancellor) ஆனார்கள். இவர்கள் கானாடுகாத்தான் என்னும் ஊரில், 1905-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பிறந்தார்கள். சென்னைமாநிலக் கல்லூரியில் பயின்று, 1924-ஆம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றார்கள்.

இளம் பருவமுதல் இவர்கள் பொதுநலப்பணியில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபடுவாராயினர் தம் இருபத்துநான்காம் வயதில் பேங்குகளின் நிலையை ஆராய்ந்த குழுவிலும், தம் இருபத்துஆறும் வயதில், வாக்களிப்பு முறைகளை ஆராயச் சென்னை அரசாங்கம் அமைத்த குழுவிலும் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார்கள்.

1929-ல், இராசா சர். முத்தையச் செட்டியார் அவர்கள் (அப்பொழுது குமாரராஜா) சென்னை நகராண்மைக் கழகத்தின் உறுப்பினராகி, ஆறு ஆண்டுகள் அரும்பணி யாற்றினார்கள். நகராட்சியின் சிக்கல்களை விரைவில் உணர்ந்துகொள்ளும் ஆற்றல் மிக்கவராக இருந்தமையால், இவர்கள் சென்னைமக்களின் நன்மதிப்பையும், அரசியலாரின் பாராட்டையும் பெற்றார்கள். 1932-ல், சென்னை நகராண்மைக் கழகத் தலைவராகப் போட்டியின்றி இவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். இவர்களுடைய முயற்சியின் விளைவால், 1933-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மேயர் பதவி தோற்றுவிக்கப்பெற்றது. இவர்களே 1933-ல் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றதோடு, 1934-35-ஆம் ஆண்டில் மீண்டும் ஒருமுறை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். இவ்வளவு இளம்வயதில் யாரும் எங்கும் மேயரானதில்லை என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சென்னை நகரம் பல்வேறு வகைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தது.

இவர்கள், 1930-ல், சென்னைச் சட்டசபையில உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, அக்காலந் தொடங்கிச் சென்னை மாநிலத்தின் பொதுவாழ்வில் சிறந்துவிளங்கும் ஒருவராகத் திகழ்ந்துவருகிறார்கள். 1936-ல் கல்வி, சுகாதார அமைச்சராகப் பணியாற்றினார்கள். அதே சமயத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவும் (Pro-Chancellor) இருந்

---

* இணைவேந்தர் (Pro-Chancellor) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தார்கள். 1937-ல் மீண்டும் சென்னைச் சட்டசபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, ஸ்தல ஸ்தாபன அமைச்சராகவும் பணிபுரிந்தார்கள். பின்னர், திரு ச. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது இவர்கள் எதிர்க்கட்சியின் தலைவராக இருந்தார்கள்.

சட்டசபை உறுப்பினர் பதவி இவர்களுக்கு ஒரு அணியன்று; சட்டசபையில் பொறுப்புக்களைக் கடமை உணர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, அம் மன்றத்தில் ஆலோசனைக்கு வரும் ஒவ்வொரு செய்தியையும்பற்றி ஊன்றிச் சிந்தித்து வருகிறார்கள்; எதனையும் பல கோணங்களிலிருந்து சிந்தித்து முடிவிற்கு வருவது இவர்கள் இயல்பு; முடிவு செய்த பின்னர் அதனை அஞ்சாமல் வெளிப்படுத்தும் ஆற்றல் உடையவர்கள்; அன்பும், நல்ல பழக்கங்களும் தம் குடும்பத்தாரிடமிருந்து இவர்கள் பெற்ற செல்வங்கள். இதனால், எப்பொழுதும் கருணையுடன் விடை கூறி, மாற்றாரிடம் கடுஞ்சொல் கூறாது, காரியவெற்றி பெறுகிறார்கள்.

கல்வித்துறையில் இவர்களுக்கு எப்பொழுதும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. இத்துறையில் பெருந்தொண்டாற்றிய டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அருமைப் புதல்வர் என்ற முறையில், இவர்களுக்கு இந்த ஆர்வம் இருப்பது இயற்கையேயாகும். 1928-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், சட்டசபைக்கு வந்தபொழுது இவர்கள் அதனை ஆர்வத்துடன் ஊன்றிக் கவனித்து, இப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதில் தந்தையார் அவர்களுக்கு உதவியாக இருந்தார்கள். அன்றுமுதல் கல்வித்துறையில் இவர்களுடைய ஆர்வம் மேலும் மேலும் பெருகிவருகின்றது. இவர்கள் பச்சையப்பர் அறநிலையங்களின் ஆட்சிக்குழுவில் 25 ஆண்டுகளுக்கு மேல் உறுப்பினராக இருந்து, சிறந்த தொண்டாற்றி வருகின்றார்கள். இவர்களுடைய அறிவுரைகள் அனைத்தையும் அக் குழு உறுப்பினர்கள் எப்போதும் ஏற்று வருகின்றனர். கடந்த 25 ஆண்டுகளாகப் பச்சையப்பர் கல்லூரியின் வளர்ச்சியில் இவர்கள் பெரும்பங்குகொண்டுள்ளார்கள். இவர்கள் ஆட்சிக்குழுவின் தலைவராக இருந்தபோதுதான் பச்சையப்பர் கல்லூரியின் நூற்றாண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவில் ஆறாண்டு (1940-46) இவர்கள் உறுப்பினராக இருந்து, பல்கலைக் கழகத்துக் கல்விமுறை, ஆட்சிமுறைகளைத் தெளிவாக ஆராய்ந்துள்ளார்கள். தம்முடைய தலைசிறந்த செல்வாக்கைப் பல்லாற்றானும் பயன்படுத்தித் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழிசை

வளர்ச்சிக்கும் சிறப்பாக இவர்கள் செய்துவரும் அரும்பெருந் தொண்டுகள் என்றும் பாராட்டப்பெறும்.

பேங்குகளின் நடவடிக்கைகளில் இவர்கள் மிகுந்த அனுபவம் உடையவர்கள். இந்தியன் பேங்கின் டைரக்டராக நான்கு ஆண்டுகள் (1928-32) பணியாற்றினார்கள்; இம்பீரியல் பேங்கின் டைரக்டராக 1932 முதல் 1936 வரை பணியாற்றி னார்கள்; மீண்டும் அந்த டைரக்டர் குழுவில் 1945-ஆம் ஆண்டு முதல் உறுப்பினராகி, இப்போது இப் பேங்கின் சென்னைக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்கள்.

இவர்கள், 1941-ல் தென்னிந்திய வணிகச்சபையின் தலைவராக இருந்தார்கள். தொழில்—வணிகச்சபைகளின் அகில இந்திய அமைப்பு நிலையத்தின் தலைவராக 1943-44-ல் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். இப் பெரும்பேற்றைப் பெற்ற தென்னிந்தியர், இன்றளவும் இவர்கள் ஒருவரேயாவர்.

போர்க்காலத்தில், தேசீயப் பாதுகாப்புக் குழுவில் இவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். இதன் பயனாக, நாட்டின் தற்காப்பினைப் பற்றியும், முப்படைகளைப் பற்றியும் செம்மையாக அறிந்துகொள்ள இவர்களுக்கு வாய்ப்பு நேர்ந்தது. 1946, 1952-ஆம் ஆண்டுகளில் சென்னைச் சட்டசபையில் உறுப்பின ராக இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெற்று, இன்றளவும் அதன் உறுப்பினராக இருந்து வருகின்றார்கள். அரசியல் அமைப்பு மன்றத்திலும் இவர்கள் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப் பெற்றார்கள்.

சென்னைச் சட்டசபையில் மிகக் கூடுதலாகிய அநுபவம் உடையவர்கள் என்று ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர் களைக் குறிப்பிடலாம். ஏறத்தாழ ஒரு தலைமுறை-25 ஆண்டு களாகத் தொடர்ந்து அச் சபையின் உறுப்பினராக இருக்கின் றார்கள். இதனால் சட்டசபைத் துறையில் அனுபவக் களஞ்சிய மாக விளங்குகின்றார்கள். சட்டசபையின் நடவடிக்கைகளில் இவர்கள் கலந்துகொண்டு நலம்பயக்கும் ஆலோசனைகள் பல வற்றைத் தெரிவிப்பதினின்றும் இவ்வனுபவம் நன்கு புலனா கின்றது. சட்டசபை நடைமுறைஅறிவில் இவர்களுக்கு ஒப்பாரும், மிக்காரும் இப்போது இல்லையென்று கூறலாம்.

சென்னைமாநிலத்தில் சிறந்து விளங்கும் பொதுநல நிலையங்களெல்லாம் எவ்வகையிலேனும் இவர்களின் தொடர்பைப் பெற்றனவாகவே இருக்கும். இவர்களுடைய தோற்றப் பொலிவு, அறிவின் ஆழம், ஒவ்வொரு செயலையும் நுணுகி ஆராயும்

ஆற்றல், முன்னேற்பாட்டுடன் நடந்துகொள்ளும் தன்மை ஆகிய இக்குணச் சிறப்புக்கள் இவர்களோடு பழகுவார் அனைவர் உள்ளத்தையும் கவர்கின்றன. இவர்கள் அருள் நிறைந்தவர்கள்; அலுவல்கள் மலைபோற் குவிந்திருப்பினும் எப்போதும் எவருக்கும் காட்சிக்கு எளியவர்கள்; இவர்களுடைய பெருந்தன்மை பிறரிடம் காணுதற்கு அரியது; அனைவரையும் வயப்படுத்தும் இயல்புடையது. இவர்கள், நலம் பயக்கும் செயல்களிலெல்லாம் ஈடுபடும் இயல்புடையவர்கள்; இதனால் எல்லா வகுப்பினரிடையும் இவர்களுக்குப் பல நண்பர்கள் இருக்கின்றனர். செட்டி நாட்டு அரசர் குடும்பத்தினருக்கு உடன்பிறந்த இயல்பாகிய விருந்தோம்பலை இவர்கள், அன்பே உருவாகிய தம் மனைவியார் செட்டிநாட்டு அரசி அவர்களுடைய உதவியுடன் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களுடைய தந்தையார் அவர்களிடத்தில் இவர்களுக்கு இருக்கும் பெருமதிப்பும் தந்தையார் மேற்கொண்ட துறைகளிலெல்லாம் தாமும் ஈடுபட்டு அவற்றை வளர்க்கவேண்டும் என்பதில் இவர்கள் கொண்டிருக்கும் தளராத பேரார்வமும், இவர்களுடைய தந்தையாரின் நண்பர்களை எல்லாம் இவர்கள்பால் ஈர்த்து இவர்களை மதிக்கச் செய்கின்றன.

தம் தந்தையார் அவர்கள் உயிர்போற் கருதிய நிலையங்களைப் பாதுகாத்து வளர்ப்பதே தமது வாழ்க்கையின் தலைசிறந்த குறிக்கோளாக இவர்கள் கொண்டுள்ளார்கள். தம் தந்தையார் அவர்கள் நாள்தோறும் பேணிவளர்த்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், தமிழ் இசையையும் ஆதரித்துப் பாதுகாத்தும் வளர்த்தும் வருவதில் இவர்களின் உள்ளமும், செயலும் எப்போதும் ஈடுபட்டுள்ளன. இவர்களுக்கு நன்றிசெலுத்தும் முறையில் இவர்கள் பெயரால் கலைனுறு மண்டபம் ஒன்றை அமைக்கவும் இவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கவும் பல்கலைக் கழகம் முடிவு செய்திருப்பது மிகவும் பொருத்தமாகும். தலைசிறந்த பொறுப்பொன்றை இவர்கள் ஏற்று, மக்களுக்கு வழிகாட்டும் நன்னாளை நாடு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

பல்கலைக் கழகம் தன் வரலாற்றில் பெருவளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இவ்வமயத்தில் தம் தந்தையாருடைய தலைசிறந்த வழிவகைகளைக் கடைப்பிடிக்கும் ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களின் தொண்டு கிடைத்துவருவதை நினைக்குந்தோறும் உள்ளம் பெரு மகிழ்வெய்துகிறது. இவர்கள் மேலும் மேலும் பல பொதுநலப் பணிகள் புரிந்து, இன்புற்று நீடூழி வாழ்க என இந் நன்னாளில் இவர்களை வாழ்த்துவோமாக.

வெள்ளிவிழா வாழ்த்துப் பாடல்கள்

[பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

மக்கள்உளம் மகிழ்ந்துநல வாழ்வுவளம்
பெறவேண்டின் மன்னும் கல்வி
மிக்குலகில் அறிவொளி விளக்கமுற
வேண்டுமெனும் உணர்வாம் வித்துத்
தக்கதிரு வுங்கொடையும் தழைத்தஅண்ணா
மலையரசர் தகைசேர் நெஞ்சில்
புக்குமுளைத் ததன்பயனே போற்றுமிந்த
வெள்ளிவிழாப் பொலிவென் பேமால். (க)

தென்னாட்டுக் குபேரர்முடி புனையாத
பெருவேந்தர் திறல்வன் மைக்கு
முன்னாட்டும் வள்ளல் அண்ணா மலைபதித்த
கல்விவித்து முளைத்தே யைந்து
சொன்னாட்டுங் கல்லூரி யாய்த்தளிர்த்து
வளர்ந்தொன்றாய்த் தொடர்ந்து பின்னர்
எந்நாட்ட வரும்வியப்பப் பலகலைகள்
வளர்கழகம் எனவோங் கிற்றே. (உ)

ஓங்கியஅண் ணாமலைப்பல் கலைக்கழகம்
எண்ணெழுத்தென் றுரைப்ப தான
நீங்கரிய இருகோடும் பலகிளையுங்
கொண்டுகலை நிழல்ப ரப்பி
ஈங்கறிவு மலர்ந்துபுகழ் மணங்கமழ்ந்தே
ஈழமுதல் இமய மட்டோ
யாங்கணுந்தன் மாணவராங் கனிகளையீந்
தின்புறுத்தல் அறியார் யாரே (௩)

தனியொருவர் முயற்சியினுற் செயற்கரிய
கலைக்கழகந் தன்னை நாட்டிக்
கனிமனத்தால் தமிழகத்தார் கலையுயர்வு
பெறச்செய்த கருணை வள்ளல்
மனிதர்களில் தலையான மனிதர் அண்ணு
மலையரசர் புகழ்போல் அன்னுர்
இனியதமிழ் இசைவளர்த்த எழிலார்பல்
கலைக்கழகம் இலங்கும் என்றும். (ச)

இத்தகைய கலைக்கோயில் எண்ணியவா
றியற்றிநின்ற இணையி லாத
உத்தமர் அண் ணுமலைவேள் உலகினுக்குப்
பலநெறியால் உதவி செய்த
அத்தனையும் அறிவாற்றல் அஞ்சாமை
வினைத்திட்பம் அருளன் பாய
வித்தகமாங் குணநலமும் விளம்புனூறிற்
பெருநூலாய் விரியு மன்றே. (ரு)

அருளார்ந்த பேரறஞ்செய் அரசர்அண்ணு
மலைவள்ளல் அணிசேர் சீர்த்தி
உருவான சிலைதிறந்த உயர்குணத்தர்
கலைவளர்க்கும் ஒண்மை மிக்கோர்
மருவாரும் பொழில்புடைசூழ் வளநாடாம்
மைசூர்நா டாளு மன்னர்
பெருமானும் செயசாம ராசவுடை
யார்பகதூர் பெரிது வாழ்க. (சு)

மன்னும்உல கியலறிவும் வளமான
மொழித்திறமும் மருவும் மேலோர்
தன்னிகரில் குடியரசாய்த் தாயகம்வாழ்
வுறப்பணிசெய் தளராத் தொண்டர்
சென்னைமா நிலம்ஆட்சி செயும்கவர்னர்
பலகலைகள் சிறப்புற் றோங்கும்
இந்நிலையத் தின்முதல்வர் பிரகாசா
நலம்பலபெற் றினிது வாழ்க. (எ)

காந்தியார் வகுத்தநெறி கடைப்பிடித்துச்
சிறைபுகுந்து கலக்க மின்றிச்
சாந்திபெறத் தொண்டாற்றித் தமிழ்நாட்டுக்
காங்கிரசுத் தலைமை யெற்று
ஏந்துபெரும் புகழாளர் பொறியியல்மா
ணவரில்லம் இவண்தி றப்போர்
வேந்தரென முதல்அமைச்சாய் மிளிர்குமா
ராசர்நலம் மிக்கு வாழ்க. (௯)

பேரறிஞர் தலைசிறந்த செயல்வீரர்
ஆட்சிநலம் பேணும் வள்ளல்
சீரியதம் தந்தையெனத் திகழ்அண்ணன்
தமிழ்நாட்டின் திலகம் எங்கள்
நேரியஇக் கலைக்கழகப் புரவலர்நற்
குணங்குன்று நிறைதொண் டாற்றும்
பாரறிந்த ராசாசர் முத்தையவேள்
பல்லூழி செழித்து வாழ்க. (௯)

சொல்லாற்றல் நுண்ணறிவு துலங்குசட்டக்
கலைஞானம் தூய பண்பு
நல்லாட்சித் திறமுதலாம் நலங்கள்பல
ஒருங்கமைந்தோர் நற்றொண் டாற்றும்
வல்லாளர் சர் சி. பி. இராமசா
மிப்பெரியோர் மதிக்கும் கல்வி
எல்லாம்மேன் மேல்வளரும் இக்கழகத்
துணைவேந்தர் இனிது வாழ்க. (௧௦)

தன்னிகரில் சீர் அண்ணா மலையரசர்
பெருங்கீர்த்தி தரணி யெங்கும்
மன்னுகஅம் மன்னவர்தம் மரபுவழி
வழிப்பெருகி மகிழ்ந்து வாழ்க
துன்னியஇக் கலைக்கழகம் நாளும்
வளர்வுறுக தொடர்ந்து கல்வி
இந்நிலையப் பணிபுரிவோர் எல்லோரும்
இறையருளால் இனிது வாழ்க. (௧௧)

பல்கலைக்கழகம் நீடுவாழ்க!

[திரு. பாரதிதாசன்]

அகவற்பா

*தண்ணாருந் தாயகம் ஒண்மை யெய்த
அண்ணா மலைநகர் ஆக்கி அண்ணாமலைப்
பல்கலைக் கழகம் பண்ணி எண்ணிலா
நல்லா சிரியரை நயந்து பல்வகைத்
துறைதொறும் வகுப்பு நிறைவுற மாணவர்க்
கறிவுபெற வருகென அன்பழைப் பனுப்பிக்
கழகம் தனது காலெடுத் தூன்றி
நடக்கத் துவங்கிற் றென்ற நன்னிலை
அடைவித் தான்எழில் அண்ணா மலைஅரசு
அந்நிலை அந்நாள் பல்கலைக் கழகம்
அடைந்த தென்றால் அதற்குக் காரணம்
கனிந்த உள்ளத்துக் காவலன் கைப்பொருள்
இழப்பு மட்டுமா அண்ணலின் இடையறா
உழைப்பும் காரணம் தழைதமிழ் நாட்டில்
உடைமை உடலுழைப் பிரண்டும் உதவிய
கொடையிற் பெரிய கோமான் ஒருவனைக்
காட்டெனிற் செட்டி நாட்டானைக் காட்டுவோம்
காய்ப்புநா ளின்முன் காய்த்துப் பழுத்தமாந்
தோப்பும் போன்ற தூய்கழ கத்தாய்
அதற்குள் எத்தனை ஆயிரம் அறிஞரை
எத்தனை ஆயிரம் முத்தமிழ்ப் புலவரை
ஈன்று புறந்தந்தாள் ஈடெடுப் பில்லா
எழுத்தா ளர்கள் எத்தனை பேர்களைப்
பேச்சா ளர்கள் எத்தனை பேர்களை
அளித்தாள் பொருளின் பெற்றி ஆயுநர்
தமிழிசை வல்லுநர் அமிழ்தப் பாவலர்
இந்தா இந்தா என்று தந்தாள்
ஒருநூற் றாண்டில் தரத்தகு பயனைக்
கால்நூற் றாண்டில் தந்தது கழகம்
அதற்கு வையம் அடிநாள் விழிபெற*

வண்தமிழ் வழங்கியார் வழிவழி வந்த
பேரா சிரியரைக் கழகம் பெற்றதும்
பாரா சிரியர் புகழும் பண்புறு
சீபி இராம சாமியை அடைந்ததும்
கன்றை ஆனெனக் கழகத்தை யோம்பும்
அறிஞர்முத் தையாவை அண்ணலின் புதல்வனைப்
பெற்றதும் அன்றோ உற்ற காரணம்
வயலும் ஏரும் மழையும் எருவும்
இருந்தும் என்ன செய்வேன் என்னுமோர்
ஏழைக்கு விதைநெல் ஈந்தான் போல
அரசன்அண் ணாமலை, திருநாட் டுக்குப்
பண்டைப் பெருமையும் பதியும் நிதியும்
இருந்தும் வருந்தும் நிலைமை எண்ணி
அறிவின் ஊற்றுத் திறந்தான் அப்பெரு
நிறுவனம் வெல்க நீடுவா ழியவே
அண்ணா மலைபுகழ் விண்ணென விரிக
அன்னோன் மக்களும் சுற்றமும் மற்றும்
கழகம் காக்கும் கணக்கா யர்களும்
வழுவிலா தென்றும் மாணவர் தாமும்
எழிலுறு சீபி இராம சாமியும்
வாழிய பழந்தமிழ் நாடு
வாழிய வாழிய வண்தமிழ் நன்றே

கட்டளைக் கலித்துறை

தேனூற்றும் பூவில் தமிழூட்டும் வண்டு திகழ்பொதும்பர்
வானூற்று நண்ணுதில் லைக்கண் அண்ணாமலை மன்னளித்த
ஆனூற்று பாலின் அறிவூற் றிடும்பல் கலைக்கழகம்
கால்நூற் றாண் டுங்கண்டு பல்லூழி யுங்காண வாழியவே.

தமிழ் வளர்ச்சி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தொடக்கநாள் முதல் இதன் தமிழ்த்துறையும் வளர்ந்து வருகின்றது. இப் பல்கலைக் கழகம், 25 ஆண்டுகளாகத் தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் செய்து வரும் பணிகளை எண்ணிப் பார்த்தால், இது தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெனச் சிறப்பானதோர் இடம்பெற்றிருப்பது புலனாகும். எனவே, இப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்த டாக்டர் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் விருப்பம் ஒருவாறு நிறைவேறிவிட்டதாகக் கூறலாம். செனெட் சபையின் தொடக்க விழாவின்போது இராசா அவர்கள், ஆற்றிய சொற்பொழிவு இன்னும் நம் செவிகளில் ஒலித்த வண்ணமாக இருக்கின்றது. தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று இராசா அவர்கள் அப்போது தெரிவித்தார்கள். அன்னாரின் திருவுள்ளமே இன்று தமிழ்த்துறைக்கு உறுதுணையாக நின்று உதவுகின்றது. தந்தையார் அவர்களைப் போலவே தமிழ்மொழியை மேலும் மேலும் வளர்த்து அதற்குப் பெருமைதரும் மைந்தரும், தமிழ்நாட்டின் தலைசிறந்த தோன்றலும் ஆகிய இராசா சர். முத்தையச் செட்டியார் அவர்களின் அரும்பெரும் பணிகளுக்கு நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழில் தேர்ச்சி அடைந்து பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெறுவதற்குரிய வகுப்பு இப் பல்கலைக் கழகத்திலேயே முதன் முதலாகத் தொடங்கப்பெற்றது. தமிழாசிரியர்கட்கு ஆசிரியப் பயிற்சி முதன் முதல் அளித்த பெருமையும் இப் பல்கலைக்கழகத்தையே சாரும். பிற பல்கலைக்கழகங்களில் தமிழுக்கெனப் பேராசிரியப் பதவி இல்லாமலிருந்தபோது தமிழுக்கெனப் பேராசிரியப் பதவியொன்றை முதன்முதலாக ஏற்படுத்தித் தமிழைப் பெருமைப்படுத்தியதும் இப் பல்கலைக் கழகமேயாகும்.

தமிழ்த் துறையின் ஒரு பகுதியாக விளங்கிய தமிழ் ஆராய்ச்சித்துறை, டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களின் ஆட்சிக்காலத்தில் தனக்கென ஒரு பேராசிரியரைக் கொண்டு தனித் துறையாகியது. அடுத்து டாக்டர் சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் துணைவேந்தராய் வந்தவுடன் அத் தமிழ்த்துறை மேலும் ஒரு தனித்துறையாகப் பிரிந்து. வேறொரு பேராசிரியரைப் பெற்றது. இப் பிரிவுகளைப் பிரிவு

என்று சொல்லுதல் கூடாது. தமிழ்த்துறையின் விரிவு என்றே சொல்லுதல் வேண்டும். எனவே, தமிழுக்கென இப்பொழுது மூன்று பேராசிரியர்களும், தம் மூவரையும் தலைவராகக் கொண்ட மூன்று தனித்துறைகளும் உள்ளன. இன்னும் சொன்னால், தமிழுக்குப் பேராசிரியர் நால்வராகும் நிலை வந்து கொண்டிருக்கிறது. அஃதாவது, இந்திய அரசியலார் வெள்ளி விழா நினைவாகப் பெருந்தன்மையோடு அளித்த மூன்று லட்ச ரூபாயை மூலதனமாகக் கொண்டு, ஒரு தமிழ்ப் பேராசிரியரை நியமிக்கவும் பல்கலைக் கழகத்தார் கருதியுள்ளனர்.

தமிழ்க்கலைப் பகுதிக்கு டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் எம். ஏ., அவர்களும், தமிழ்க் கீழ்த்திசைக் கலைப் பகுதிக்குப் பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களும், தமிழ் ஆராய்ச்சிப் பகுதிக்கு வித்துவான் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்களும் பேராசிரியர்களாகவும், தலைவர்களாகவும் இப்போது உள்ளனர். இவர்கள் தலைமையின் கீழ்ப் பத்தொன்பது ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் தவப் புதல்வர்களெனப் போற்றப்பெறும் அறிஞர்பலர் ஆசிரியர்களாகவும் பேராசிரியர்களாகவும் இங்கே தொண்டாற்றியுள்ளனர். தமிழ்நாட்டிற்கும், வெளிநாட்டிற்கும் தமிழாசிரியர்களையும், தமிழ்ப்பேராசிரியர்களையும் தமிழ்ப் பகுதி தந்துதவியிருப்பதும் மகிழ்வுடன் குறிப்பிடத்தக்கது. தமிழாராய்ச்சித் துறையினின்று பல அரிய நூல்கள் வெளிவந்துள்ளன.

தமிழ்த் துறையின் முதல் தலைவராகவும் ரீடராகவும் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம் ஏ , எம்.எல். அவர்கள் பொறுப்பேற்றார்கள். ஓராண்டுக்குப் பின் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் அப் பொறுப்பினை ஏற்றுச் சிலகாலம் நடத்தினார்கள்.

பின்னர் இராமகிருட்டின மடத்தைச் சேர்ந்த துறவியான விபுலானந்த அடிகள் இராசா அண்ணாமலை வள்ளல் அவர்களின் விருப்பத்திற்கேற்ப 1931-ஆம் ஆண்டு முதற் பேராசிரியராகப் பதவியேற்றார்கள். இவர்கள் காலத்தில்தான் தமிழ்ச்சிறப்பு வகுப்பு (பி. ஏ. ஆனர்ஸ்) தொடங்கப்பெற்றது. தமிழ் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பிற் பயின்ற மாணவர்கள், முதன்முதலாக 1934-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றனர். தமிழ்ச்சிறப்பு வகுப்பு மாணவர்கள் மெய்ப்பொருள் நூல்களும் பயிலத் தொடங்கினர்.

பி. எஸ்ஸி. படிக்கும் மாணவர்கள் ஆங்கிலம் நீங்கலாக மற்றொரு மொழி படிக்கவேண்டும் என்று திட்டம் செய்யப்பெற்றமையால், தமிழ் கற்கும் வாய்ப்பு, பி. எஸ்ஸி. மாணவர்களிற் பெரும்பாலோருக்கும் கிடைப்பதாயிற்று. விபுலானந்த அடிகள் இங்கிருந்த பொழுதுதான் தமது ஒப்பற்ற இசையாராய்ச்சி நூலாகிய யாழ் நூலை இயற்றத் தொடங்கினார்கள்.

பின்பு 1933-ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள். எம். ஏ., பி. எல்., தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்கள். இவர்கள் இங்குப் பணி புரிந்தபோது தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்குப் புத்துரைகண்டு. தொல்காப்பிய உரையாசிரியர் வரிசையிலே தாமும் ஒருவரானார்கள். தாம் இயற்றிய 'மாரிவாயில்' என்னும் நூலை அக்காலத்தில் வெளியிட்டனர். அந்நூல் வள்ளல் அண்ணாமலை அரசர் அவர்களுக்கு உரிமையாக்கப்பெற்றது. இவர்கள் மேலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதினார்கள். இவர்களுக்குப் பல்கலைக் கழகத்தார், வெள்ளிவிழாவன்று டாக்டர் பட்டம் வழங்கியிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இவர்கள் தலைவராய் இருந்தபோதுதான் தமிழ் ஆராய்ச்சித்துறை தோன்றியது. மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் இத் துறையில் முதல் தமிழ் விரிவுரையாளராக இருந்து, அரிய பணிகள் பல செய்தனர். அவர்களது இனிய பாடல் இயற்றும் வன்மைக்குப் "பாரிகாதை" யும், அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பற்றிப் பாடிய பாடல்களும், அன்னாரது ஆராய்ச்சி ஆற்றலுக்கு, அவர்கள் எழுதிய 'தமிழ் வரலாறு', 'நித்தன்', 'கோசர்', 'குறுந்தொகையுரை', 'பட்டினப்பாலையுரை', 'பெரும்பாணாற்றுப் படையுரை', ஆகிய நூல்களும் சான்றாகும். இவர்கள் இன்னும் பல நூல்கள் எழுதியுள்ளனர். ஆயினும், மேற்குறிப்பிடப்பெற்றவை, இவர்கள் இப் பல்கலைக் கழகத்திற் பணிபுரிந்தபோது இயற்றப்பட்டனவாகும். இவற்றுள் "பாரிகாதை", அண்ணாமலை அரசருக்கு உரிமையாக் கப்பெற்றது. இந்நூல், புலவர் பெருமக்கள் பலர் குழுமிய பெரியதோரவையில், (குமார) இராசா சர். முத்தையச் செட்டியார் அவர்கள் திருமுன்பு பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றப் பெற்றது.

திருவாசகத்தில் உள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய பகுதிகளுக்கு அரியதொரு உரைகண்டும், இனிய இலக்கியக் கட்டுரைகள் பலவற்றை எழுதியும், நுண்ணிய சமய நுட்பங்களை அறிந்து உரைத்தும் பெரும்புகழ் பெற்ற பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்,

1934-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் விரிவுரையாளராக நான்கு ஆண்டுகளும், தமிழ்த்துறைத் தலைவரின் அலுவல்களைக் கவனித்து (Acting Professor) இரண்டாண்டுகளும் பணியாற்றினார்கள். இவர்கள் காலத்தில் சமப்பிரதான வித்துவான் வகுப்புக்களில் தமிழும் வடமொழியும் கற்கும் மாணவர்கள் சேர்ந்து பயின்றனர். அரசியலார், பண்டிதமணி அவர்களின் பெரும் புலமையைப் பாராட்டி, மகாமகோபாத்தியாய என்ற பட்டத்தை 1942-ஆம் ஆண்டில் இவர்களுக்குக் கொடுத்துச் சிறப்பித்தனர். அப்பட்டத்துக்குரிய விருதுகளைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவன்று கவர்னர் அவர்கள் பண்டிதமணி அவர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத் தக்கது. அவ்வாண்டிலேயே சென்னைப் பல்கலைக் கழகத்தார், கௌரவ ரீடர் பதவிச் சொற்பொழிவுகள் செய்யுமாறு இவர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றுவித்தனர். பண்டிதமணி அவர்கள் தம் ஊருக்குச் சென்று ஓய்வு பெற்று இருந்த பின்னும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் தமிழ்ப்பணி செய்ய வருமாறு இவர்களை அழைத்தனர். அதற்கிணங்கத் தமிழ் ஆராய்ச்சி ஆலோசனையாளராகப் பொறுப்பேற்றார்கள். அப்பொழுது வட மொழியிலிருந்து கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தை மொழி பெயர்த்தனர். அவ்வமயம் தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்கள். 1946-ஆம் ஆண்டில் மீண்டும் ஓய்வு பெற்றனர்.

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், 1940-ஆம் ஆண்டில் பேராசிரியராக நியமிக்கப்பெற்று, நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார்கள். வடமொழியில் வேதாந்த சிரோமணி, சாகித்திய சிரோமணி, வியாகர்ண சிரோமணி என்ற வகுப்புக்கள் இருத்தல்போலத் தமிழிலும் சித்தாந்தப் புலவர், இலக்கியப் புலவர், இலக்கணப் புலவர் என்ற வகுப்புக்கள் தொடங்குவதற்கு இவர்கள் காலத்தில் வழிவகுக்கப்பெற்றது.

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்., அவர்கள், 1944-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாண்டுகள் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றினார்கள். இவர்கள் காலத்தில் பி. ஓ. எல். பட்டப் படிப்புத் தொடங்கப் பெற்றது.

1946-ஆம் ஆண்டுமுதல் டாக்டர் திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., பிஎச். டி., அவர்கள் தமிழ்ப்பேராசிரியராக இருக்கிறார்கள். இவர்கள் 1935-ஆம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணிபுரிந்துவருபவர்கள். இப்போது உள்ள மூன்று தமிழ்த்துறைகளுள் ஒன்றாகிய தமிழ்க் கலைத்துறைப்

பகுதிக்கு 1953-ஆம் ஆண்டுமுதல் இவர்கள் பேராசிரியராக இருக்கிறார்கள். பலர் இவர்களின் மேற்பார்வையில் ஆராய்ச்சி செய்து எம். லிட்., பிஎச். டி., ஆகிய பட்டங்கள் பெற்றுள்ளனர். இவர்கள் 1948-ஆம் ஆண்டில் ஐந்து திங்கள்வரை துணை வேந்தர் (Acting Vice-Chancellor) அலுவல்களைக் கவனித்து வந்திருக்கிறார்கள். இவர்களைப் பிரிட்டிஷ் கவுன்சில் அழைத்தமையால், இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களை ஆறு வாரங்கள் சுற்றிப்பார்ப்பதற்காக இப்போது இலண்டனுக்குச் சென்றுள்ளார்கள். இவர்கள் திரும்பி வரும்வரை தமிழ்க் கீழ்த்திசைக் கலைப்பகுதிப் பேராசிரியர் பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், இக் கலைப்பகுதிக்கும் பேராசிரியராக நியமிக்கப்பெற்றுள்ளார்கள்.

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தமிழ்க் கீழ்த்திசைக் கலைப்பகுதியின் முதற் பேராசிரியராக 1953-ஆம் ஆண்டில் நியமிக்கப்பெற்றார்கள். இவர்கள் 1936-ஆம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணிபுரிந்து வருபவர்கள். 1943-ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் தமிழ் இசை ஆலோசனைக் குழுவின் செயலாளராகவும் இருந்து, 20-க்கு மேற்பட்ட தமிழிசை நூல்களைத் தொகுத்து அவை வெளிவர இவர்கள் பணிபுரிந்துள்ளார்கள். ஏழாண்டுகளாக நிறுத்தப் பெற்றிருந்த ஆசிரியப் பயிற்சி வகுப்பு இப்பகுதியில் 1953-ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப்பெற்றுள்ளது. புலவர் வகுப்பு மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பத்து ரூபாயாக இருந்த உதவிச்சம்பளம் இருபத்தைந்து ரூபாயாக இப்போது உயர்த்தப் பெற்றுள்ளது. எம். ஓ. எல். ஆராய்ச்சிப் பட்டம் பெறுவோருக்கும், புலவர் வகுப்பிற் சேரும் மாணவர்களுக்கும் உதவியாக விதிகள், தக்கவாறு மாற்றியமைக்கப் பெற்றிருக்கின்றன. மேலும் அடுத்த ஆண்டுமுதல் இப்பகுதியில், எம். ஓ. எல். வகுப்பு நடைபெறுவதற்குரிய முன்னேற்பாடுகளுஞ் செய்யப் பெற்றுள்ளன. 1901-ஆம் ஆண்டிலிருந்து 1953-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர்கள் இயற்றிய இலக்கிய மதிப்புடைய நூல்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தொகுப்பதெனை இந்தியாவின் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் இயங்கும் சாகித்திய அகாடமி முடிவுசெய்தது; தமிழைப் பொறுத்தவரையில் அப்பணி பேராசிரியர் இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றுவருகின்றது. இவர்கள் கீழ்த்திசைக் கலைப்பகுதிகளுக்கு டீனுக (Dean, Faculty of Oriental Studies) வும் இருந்துவருவருகிறார்கள். இப் பகுதியில் பணியாற்றும் திரு. கே. என்.

சிந்தாமணி அவர்கள், இதுவரை தமிழில் வெளிவந்த எல்லா நூல்களையும் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளார்கள்.

தமிழ் ஆராய்ச்சிப் பகுதி தனித்துறையாகப் பிரிந்த நாளி லிருந்து வித்துவான் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள் பேராசிரியராக நியமிக்கப்பெற்றுள்ளார்கள். இவர்கள் 1941-ஆம் ஆண்டிலிருந்து தமிழாசிரியராக இங்கே பணிபுரிந்து வருபவர்கள். இப் பகுதியில் "பிற்காலச் சோழர் சரித்திரம்" என்ற சிறந்த நூல் மூன்று பகுதிகளாகத் திரு. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களால் எழுதப்பெற்று இரண்டு பகுதிகள் இப்போது வெளிவந்துள்ளன. கம்பராமாயணத் திற்குத் திருத்தமான பதிப்பொன்றை வெளியிடுதற்காகப் பல ஏட்டுச்சுவடிகள் இப்போது ஒப்புநோக்கி ஆராயப்பெறுகின் றன. இம் முயற்சியின் பயனாகச் சுந்தர காண்டத்தின் முற் பகுதி வெள்ளிவிழாவன்று வெளிவர இருக்கிறது. இவ் வாராய்ச்சிப் பகுதியிற் பணியாற்றும் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணன் அவர்கள், இப்போது திருமுறை ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வித்தகர்கள் பலரும், இக்காலத்துக்கேற்றவாறு நுண்ணியற்கலைகளான அறி வியல் ஆய்புலனில் கருத்தூன்றிப் பிறநாட்டு நல்லறிஞர் நூல் களைப் பெயர்த்தும், வரலாற்றுண்மைகளை நன்கு தெரிந்து விளக்கியும் போதருகின்றனர்.

தமிழ்மரபு கெடாதவாறு வேற்றுச் சொற்களைப் புத்தம் புதிய முறையில் படைத்துத் தமிழ்மொழியை வளப்படுத்துகின் றனர். ஆசிரியர்கள் பலரும் கடப்பாட்டுணர்ச்சியுடன் கருத் தூன்றித் தொழிலாற்றிவருவது போற்றுதற்குரியதாகும். இவர்கள் அரும்பெரும் பணிகளால் நம் தமிழன்னை புத்தணி பூண்டு கிளர்ச்சியுடன் வளம்பெற்றுவருவது நாட்டுக்கு நலம்பல பெருகுவதாகும்.

இத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மூன்று தமிழ்த்துறை களும் மேலும் மேலும் வளர்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் சிறந்த பணியாற்றும் என்பது உறுதியாம்.

தமிழ்இசை வளர்ச்சி

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பொதுவாக எல்லா வகைக் கல்வியையும் வளர்த்து வருகின்றதெனினும், மிகச் சிறப்பாக வளர்த்து வருகின்ற சிலவற்றுள் இசைக் கல்வியும் ஒன்றாகும். இசைக்காகத் தனியே நான்கு ஆண்டு வகுப்பு, முதன் முதலாக நடத்திப் பட்டம் வழங்கும் பெருமை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியது. 1929 ஆம் ஆண்டில் இசைக் கல்லூரியை நிறுவிய டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், அக் கல்லூரி நிலைபெற்று வளர்ச்சியுற்ற வுடன் 1932 ஆம் ஆண்டில் அதனைப் பல்கலைக்கழகத்தோடு இணைத்தார்கள். சிறந்த இசைவாணர்களாகிய சபேச ஐயர், சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார், தஞ்சை சங்கீத கலா நிதி கே. பொன்னையா பிள்ளை, திருப்பாம்புரம் சங்கீத கலாநிதி டி. என். சாமிநாத பிள்ளை முதலியோர் இக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தார்கள். இப்போது புகழ்பெற்று விளங்கும் சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம், திரு. டி. கே. ரங்காச்சாரியார், திரு. எஸ். வி. பார்த்தசாரதி, திரு. கே. எஸ். நாராயணசாமி ஐயர் முதலிய பலர் இக் கல்லூரியில் பயின்ற பழைய மாணவர் ஆவர். இங்கே வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம், தேவாரம் ஆகியவை கற்பிக்கப் பெறுகின்றன. இப் பல்கலைக் கழகத்தில், இசை கற்பதற்கும் தமிழ் கற்பதற்கும் இலங்கையில் இருந்து மாணவர் பலர் ஆண்டுதோறும் வருவது குறிப்பிடத் தக்கது.

1936 ஆம் ஆண்டில், துணைவேந்தர் மகாகனம் வி. எஸ். சீநிவாச சாஸ்திரியார் அவர்கள் தலைமையில் ஒரு இசை மாநாடு இப் பல்கலைக்கழகத்தில் கூட்டப்பெற்றது. தமிழ்ப்பாடல் களைப் பலர் அறியச் செய்யவும், தமிழ்இசைப் பாடல்களை மேலும் மேலும் ஆக்கவும் ஆவன செய்யவேண்டுமென்று அம் மாநாடு வற்புறுத்தியது. ஆயினும், 1940 ஆம் ஆண்டு வரை இப் பல்கலைக் கழக இசைப் பகுதி, பிறமொழிப் பாடல்களுக்கே இடம் தந்திருந்தது. இசைவாணர்கள் தமிழ்நாட்டு இசை அரங்குகளிலும் பிறமொழிப் பாடல்களையே பாடுவாராயினர். நம் நாட்டு இசையரங்குகளில் வேற்றுமொழிப் பாடல்கள் பாடப் பெறுவது நியாயமில்லை, பயனுமில்லை என்ற உணர்ச்சி அண்ணாமலை வள்ளல் அவர்களின் உள்ளத்தில் பதிந்தது. இந்த

நல்லெண்ணம், தமிழ் இசை இயக்கமாக உருவெடுத்தது. எச் செயலையும் எண்ணித் துணிந்து, துணிந்தபின் எத்தகைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது, தொடங்கிய செயலை நிறைவேற்றும் ஆற்றல் உடைய ராஜா அவர்கள், இயக்கத்திற்கு நேர்ந்த எதிர்ப்புக்களையெல்லாம் தமிழ்இசை வளர்ச்சிக்கு ஊக்கம் தருவனவாகக் கருதினார்கள். ஆனால், ராஜா அவர்கள் தொடங்கிய தமிழ் இசை இயக்கம், தமிழ்மக்களின் உள்ளங்களில் பேருவகை ஊட்டியது. டாக்டர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் போன்ற பேரறிஞர்கள் ராஜா அவர் களுடன் ஒத்துழைத்தனர். எங்கும் தமிழ் இசை மாநாடுகள் நடைபெற்றன; தமிழ்இசைச் சங்கங்கள் தோன்றின. ஆங்காங்குத் தமிழ்இசைக் கல்லூரிகள் பணியாற்றத் தொடங் கின. இசைஅரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்கள் பாடப்பெற்றன. வேற்றுமொழிப் பாடல்களுக்கு இடம் தந்திருந்த பல்கலைக் கழக இசைப் பகுதி, தமிழ்இசை கற்பிக் கும் பகுதியாக மாறியது. அவ்வளவில் அன்றிப் பழையனவும், புதியனவும் ஆகிய இசைப்பாடல்களையும், இசைஇலக்கண நூல்களையும் வெளிப்படுத்தும் பெரு முயற்சியையும் ராஜா அவர்களின் பேராதரவில் பல்கலைக்கழகம் மேற்கொண்டது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் தமிழ் இசை ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப்பெற்றது. அக் குழுவுக்குப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதஞ் செட்டியார் அவர்கள் செயலாளராகப் பணியாற் றினார். வெளியிடங்களில் உள்ள இசைவாணர் பலரும், இசைப் பாடல் இயற்றுதலில் வல்ல அறிஞர்களும், இப் பல்கலைக் கழக இசைப் பகுதி ஆசிரியர் எல்லோரும், வித்துவான் மு. அருணா சலம் பிள்ளை அவர்கள் முதலிய தமிழ்ப் பகுதி ஆசிரியர் சிலரும் ஒத்துழைத்துப் பேருதவி செய்தனர். தமிழ் இசை ஆலோசனைக் குழு, ராஜா அவர்களின் அறிவுரைகளை அவ்வப்போது பெற்று, விரைந்து செய்த பெரு முயற்சியின் பயனாக, 20 தமிழ்இசை நூல்கள், பல்கலைக் கழக வெளியீடாகச் சில ஆண்டுகளுக்குள் வெளிவந்தன. ராஜா அவர்கள் பல்கலைக்கழகத்தின் வாயி லாகத் தமிழ் இசையை வளர்த்ததோடு, சென்னையில் ஒரு தமிழ் இசைச் சங்கத்தையும் நிறுவினார்கள். அச் சங்கம், தமிழ் இசை வளர்ச்சிக்குச் சிறந்த பணிகளை இடையறாது புரிந்து வருவது நாடறிந்த செய்தியாகும். ராஜா அவர்களின் பெயரைத் தாங்கும் பெருமை பெற்று, இப்போது அச் சங்கத்தின் கட்டட மாகச் சென்னையில் விளங்கும் **அண்ணாமலை மன்றம்**, அண்ணாமலை வள்ளலின் புகழ்போல் ஓங்கி நிற்பதை நாம் கண்டு மகிழ்வெய்து கின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இதுவரை இருபது தொகுதிகளாக 23 தமிழ் இசை நூல்களை வெளிப்படுத்தியுள்ளது. அந் நூல்களில் 1254 தமிழ்இசைப் பாடல்கள் 234 இராகங்களில் அமைந்துள்ளன. சிறந்த இசைவாணர்கள், அப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகுகளில் அடங்கிய இசை இயல், தமிழர் இசைக் கருவிகள், சுரமேள கலாநிதி, பரதசங்கிரகம், மத்தளம் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும் என்ற நூல்கள் இசை இலக்கண அமைதிகளைத் தெளிவாக விளக்கத்தக்கன. மிருதங்கம் பயிலும் மாணவர் திறமைபெறும் வண்ணம் இப் பல்கலைக் கழகம் வெளிப்படுத்திய மிருதங்க பாடமுறைப் புத்தகமும் இத் தொகுதிகளில் ஒன்றாகும். இன்னும் சில நூல்கள் இப்பொழுது அச்சில் உள்ளன. மேலும் 1500 க்கு மேற்பட்ட பாடல்கள், இசை அமைக்கப்பெற்று அச்சிடுவதற்கு ஏற்ற நிலையில் இருக்கின்றன. தமிழ் இசைக்கு அரும்பெரும் தொண்டுகள் புரிந்த அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் பல சமயங்களில் தக்க புலவர்கள் இயற்றிய பாடல்கள், சிறந்த இசைவாணர்களால் இசை அமைக்கப்பெற்றுச் 'செட்டிநாட்டரசர் இசைமாலை' என்னும் பெயருடன் வெள்ளிவிழா அன்று வெளிவர இருப்பது குறிப்பிடத் தக்கது. 25 ஆண்டு நிரம்பிய நிலையில் கொண்டாடப்பெறும் வெள்ளிவிழா அன்று வெளிவரும் இந் நூலில், 25 இசைப்பாடல்கள் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இப்போது இசைப்பகுதியில், பேராசிரியர் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, மாயவரம் பிடில் கோவிந்தராஜ பிள்ளை முதலிய புகழ்பெற்ற இசைவாணர்கள் பணியாற்றி வருகின்றனர். எல்லா இசைப் பிரிவுகளிலும் நூற்றுவருக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் பயில்கின்றனர். இசையில் தேர்ச்சி பெற்றவர்கள் மிகுதியான தமிழிசைப் பாடல்களைக் கற்றுக்கொள்வதற்கு உதவியான, ஓராண்டுத் தமிழ் இசை வகுப்பு ஒன்றும் இங்கு உள்ளது. தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் இரண்டு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைத் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபராக இருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் அவர்களும், அவர்களுக்குப் பின் இப்போது அதிபராக இருக்கும் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியிருப்பது நன்றியுடன் குறிப்பிடத் தக்கது.

செழுங்கலைக்கோயில் வாழ்க!

[கழகப் புலவர் செல்லூர்க்கிழார், திரு. செ. ரே. இராமசாமிபிள்ளை]

உலகில் அளப்பருங் கோடி வளப்பரும் உயிர்கள் உள்ளன. அவையிற்றுள் மக்கட் பிறப்பும் ஒன்றாம். இம் மக்களை விலங்கி னின்றும் பிரித்து உயர்த்துவது மாண்பெருங் கல்வியாகும். இதன் பெருமையை,

'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்'

எனக் கட்டுரைத்துத் தெருட்டுவர் வள்ளுவப் பெருமகனார். இத்தகைக் கல்வி, உலகியற்கு ஒவ்வும் கல்வியும், உலகியலைக் கடந்த நுண்கல்வியும் என இருகூறாகப் பகுத்துரைக்கப்பெறும். இவ்விருவகைக் கல்வியும் ஒருங்கே பெற்ற மாநிலமே உயரிய நாடாக மீக்கூறப் பெறுவதாகும்.

இத்தகைய மாண்புமிக்க கல்வியை மக்கள் எய்துதற்கு நாட்டில் கலைக்கூடங்கள் பல்கவேண்டும்; அக் கூடங்களும் அவ்வந்நாட்டின் தாய்மொழியை ஆக்கம்பெற வளர்க்கும் நிலைக் களக்கோயிலாக மிளிர்தல் வேண்டும். அவ்வாறின்றி வேற்று மொழிக்கு முதன்மையும் தாய்மொழிக்கு அஃதின்மையும் ஆக்கும் கலைக்கோயில்களால் வெற்றாரவாரமன்றிப் பயன் யாது மின்றாம்.

இக்குறிக்கோளை முதன்மையாகக்கொண்டு முற்காலத்தில் நம் தமிழகத்தின் பழைய நாடாகிய பாண்டிநாட்டில் கூடலம் பதியில் முதலிடை கடையெனச் சங்கங்கள் நிறுவிக் கல்வி யையும் கலையையும் தமிழர் பண்பாடுகளையும் ஆக்கம்பெற ஊக்க முடன் வளர்த்தனர். அதனால் அக்காலம், அசைவில் செழுந் தமிழ் வழக்கே யாண்டும் பரவி மிளிர்ந்தது.

இதனைக் கூர்த்தறிந்த திருவும் கல்வியும் சேரப்பெற்ற செட்டிநாட்டரசர் இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள், இவ் விருபெருங் கல்வியும் நாட்டிடைப் பரவியொளிர்தல் வேண்டுமெனக் கருதினார்கள்.

தூங்காமை கல்வி துணிவுடைமை யென்னும் அரசர்க்கு அமைந்த பண்புகள் நிறைந்த அண்ணாமலையரசரின் பேருள்ளம், தில்லைக்கூத்தன் திருமுன்னர் ஓர் கலைக்கோயிலைக் கண்டது.

அக் கலைக்கோயில் வானுற வளர்ந்த மாடகூடங்களைக் கொண்டு, விண்ணையும் வெறுவிதாமென நகைப்பதுபோல் வெண்சுதை தீற்றி விளங்குகின்றது. அஃதறியாமை வேடையகற்றி அறிவின் நன்னீர் தந்துதவுகின்றது. அதுவே, அண்ணாமலைப் பல்கலைக்கழகமெனப் பெயரிய கலைமன்றம்; இஃது நாட்டுக்கு வேண்டும் எல்லாத் துறையினும் கல்வி கேள்வி நலங்களைத் தந்து அரிய தாருவாய்த் தழைத்து நிற்கின்றது; இது, தான் பிறந்த இருபத்தையாண்டகவைக்குள், நுண்கலைச் செல்வர்களை—அருங்கலை விஞ்ஞர்களை—சொல்லின் தூய்மையரை—கேள்விப் பெரியர்களை—வளர்த்து, நாட்டில் வெண்மை நீக்கி நுண்மை தந்துதவுகின்றது.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் அரிய கருத்துக்கொண்டு செட்டிநாட்டு வேந்தர் நிறுவிய இக்கழகம் இன்னும் ஆக்கம் பெற்று வளர்வதாக.

'மகனறிவு தந்தை யறிவு' என்பதற்கேற்ப, தந்தையார் வழியிற் காலூன்றிக் கடைப்பிடித்து இப் பல்கலைக்கோயிலைத் தம் இரு கண்ணெனப் போற்றிவரும் கழக இணைவேந்தர் அரசர் முத்தையச் செட்டியாரவர்களும் அவர்தம் கான்முளைகளும் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து வாழியர்.

இக் கலைக்கோயில் செழுங்கலை நிலையமாகத் திகழத் தம் மன மொழி மெய்களால் ஓவாதுழைத்துவரும் மூதறிஞர்களாகிய புலமைப் பெருஞ்செல்வர்களும் வாழியர்.

வெள்ளிவிழாக் கண்ட இக் கலைக்கோயில், இன்னும் பொன் விழா, வைரவிழா முதலிய விழாக்களைப் பெற்று வாழிய வையை மணலினும் பலவே என வாழ்த்துகின்றோம்.

அறிவுக்கோயில் வாழ்க!

[நாகை. திரு. த. சி. வேலன்]

கடவுளை அறிவின் வடிவாகக் கண்டார் வள்ளுவப் பெருந்தகை. எனவேதான் இறைவனை வாலறிவன் எனச் சுட்டிக் காட்டினார். கல்வியின் பயன் அறிவு, அறிவின் பயன் உணர்வு. அவ்வுணர்வினை—மெய்யறிவினைப் பெறுதலே இறைவனை அடைதல் எனல் மிகையாகாது. அஃதாவது மனிதன் தன்னிடத்தே படிப்படியாக இறைத் தன்மையை எய்துதல் வேண்டும். இதற்கு உறுதுணையாவது கல்வியொன்றே.

எனவே, இறைவர்க்குக் கோயில் அமைக்கும் நாம், ஆங்காங்கே இறைத்தன்மையாகிய அறிவிற்கும் கோயில் அமைத்தல் வேண்டும். அஃதாவது நாட்டில் கலைக்கூடங்கள் பல அமைத்து, மக்களை மாக்கள் நிலையினின்றும் மாற்றும் அரும்பணியாகிய அறிவாலயப் பணியில் ஈடுபடல் வேண்டும். அஃதொன்றே கடவுளிலக்கணத்தை ஐயந்திரிபு அற உணர்ந்த அறிஞர் செயல். இம்முறையினை நடைமுறையில் கண்டு நனி நாகரிகராக விளங்குகின்றனர் மேலைநாட்டினர்.

அங்கே பலப்பல பல்கலைக்கழகங்கள், பலப்பல ஆராய்ச்சித் துறைகள், ஆராய்ச்சியே தவம் என்ற நிலை இன்னபிற வளர்ந்து வருவதை நாம் நாடோறும் காண்கிறோம், கேட்கிறோம்.

இத்தகு அறிவுப்பணியில் 'மேலைநாட்டினர்க்கு யாம் பின் வாங்கினோம் அல்லோம்' என்று சூள் உரைக்குமுறையால், இற்றைக்கு 25 ஆண்டுகட்கு முன்னர் தில்லைப்பதியில் 'அண்ணாமலைப் பல்கலைக்கழக' மென்னும் அறிவுக்கோயில் கண்டார் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார். இவ்வறிவுக்கோயிலின் வெள்ளிவிழாக் கண்டு களிக்கின்றேன். தமிழகத்தில் அறிவு ஒளி தோன்றிற்று; வெள்ளி முளைத்தது; இனி அறியாமையும் அதன் தொடர்பாக உள்ள தீமைகள் பலவும் அகலும் என்பதையே இவ் வெள்ளிவிழா உணர்த்துகிறது.

அண்ணாமலையார் அறிவுக்கோயில் கண்டதுபோல் பிற தமிழ்நாட்டுச் செல்வர்களும் அறிவுக்கோயில்கள் அமைத்து, உண்மைத் தெய்வத் திருப்பணி ஆற்றுவார்களாக. வாழ்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

புகழ் மொழிகள்

உயர்திரு. டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்கள்

இந்தியக் குடியரசுத் தலைவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா நிகழும் இந்த நல்ல நாளில், என் உளமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். முன்னேற்றக் கருத்துக்களும், ஆக்கும் ஆற்றலும் கலந்த வள்ளன்மைக்குத் தக்க எடுத்துக்காட்டாக இப் பல்கலைக் கழகம் விளங்குகின்றதென்பது என் கருத்து. கல்வித் துறையிலும், பொதுத்தொண்டிலும் புகழுடைந்த பேரறிஞர்கள் தொடக்கத்திலிருந்தே இதற்குத் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். மற்றைய கல்வி நிலையங்களை ஊக்குவிக்கும் நிலையில், மேலும் மேலும் வளர்ச்சியுற்றுள்ள இப் பல்கலைக் கழகம், அப் பெரியோர்களைத் தன்பால் ஈடுபடச் செய்திருப்பது வியப்பன்று.

இந்த எண்ணம் எவ்வாறு முதலில் தோன்றிற்று. இது நாளடைவில் எவ்வாறு உருப்பெற்றது, உயர்ந்த திட்டத்திற்கேற்ப எவ்வாறு நற்பயனை யடைந்தது என்பனவற்றை யெல்லாம் இவ் விழாவில் நன்றியறிவோடு நினைவு கூர்வது மிகப் பொருத்தமாகும். காலஞ் சென்ற ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கட்குத் தமிழ்மக்கள் நன்றி பாராட்டும் கடப்பாடுடையர்; ஏனெனில், இவர்கள் கொண்ட பொது நல ஆர்வமும், எதிர்காலத்தைப் பற்றிய தெளிந்த காட்சியும், தளரா உழைப்புமே மற்றெதற்கும் மேலாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தன.

1929-ஆம் ஆண்டில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப் பெற்றது முதல் அது, எல்லாத் துறைகளிலும் மிக விரைவாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இன்று, இருபதுக்கு மேற்பட்ட துறைகளையும், நூற்றெழுபத்தைவருக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்டு, உடனுறை தனிப் பல்கலைக் கழகமாக இது விளங்குகிறது. நான்கு ஆண்டுகள் இசைக்கல்வி பயிற்றும் வகுப்பை முதன் முதலில் தொடங்கிய சிறப்பு, இந்தியப் பல்கலைக் கழகங்களுக்குள் இதற்கே உரியதாகும். தமிழ் இலக்கியக் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் தனித் துறைகளை இப் பல்கலைக் கழகம் வகுத்திருப்பது பொருத்தமே. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மேலும் மேலும் வளர்ந்து, நாட்டுக்குப் பயன் மிக்க தொண்டுகள் செய்வதாகுக.

கலைப்பெருங் கோயில் வாழ்க!

அண்ணா மலையரசன் ஆக்கு கலைக்கழகம்
விண்ணாரும் வெள்ளி விழாப்பெற்றுப்—பண்ணார்
இசைபெற ஓங்கும் இயலுடைமை யாலே
மிசையுலகில் வாழ்க மிளிர்ந்து.

—சேல்லூர்க்கிழார்.

உயர்திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள்

இந்தியாவின் தலைமை அமைச்சர்.

கடந்த எப்பிரல் திங்களில் யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றதும், அப் பல்கலைக் கழகம், புதுமைக் கலைகளும், அறிவியலும் இணையப் பெற்றுத் தமிழ்ப் பண்பாட்டிற்கும், தமிழ்க் கல்விக்கும் நிலைக்களமாகச் சிறந்து விளங்குவதை நான் கண்டதும் எனக்குப் பேரின்பம் தந்தது. இப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா விரைவில் கொண்டாடப் பெற விருப்பதை அறிந்து நான் மகிழ்வெய்துகின்றேன். இவ்வமயத்தில் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இப் பல்கலைக் கழகம், எதிர்காலத்தில் எல்லா வகையிலும் வளர்ச்சியும், வெற்றியும் பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

உயர்திரு. டாக்டர் ச. இராதாகிருஷ்ணன் அவர்கள்

இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருபத்தைந்து ஆண்டுகள் பயனுள்ள பணியாற்றி, அதன் வெள்ளி விழாக் கொண்டாடுவதை அறிந்து நான் மகிழ்வெய்துகின்றேன். இப் பல்கலைக் கழகத்தின் தோற்றத்திற்குக் காரணம், காலஞ்சென்ற ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வள்ளன்மையேயாகும். அவர்களுக்குப் பின், அன்னார் மகனார் ராஜா முத்தையச் செட்டியார் அவர்கள், இப் பெரு நிலையத்தின் வளர்ச்சியிலும், நலத்திலும் பேரூக்கம் காட்டி வருகின்றார்கள். இப் பல்கலைக் கழகம் புகழ்பெற்ற கல்வியாளர்களின் உறுதுணையைப் பல ஆண்டுகளாகப் பெற்றுத் தென்னிந்தியாவிற்குப் பெருமதிப்பிற்குரிய பணியாற்றி வந்திருக்கிறது. தென்னிந்திய ஆராய்ச்சிக்கு, சிறப்பாகத் தமிழ் ஆராய்ச்சிக்கு இப் பல்கலைக் கழக உறுப்பினர்கள் ஆற்றியிருக்கும் தொண்டுகள் மிகவும் போற்றத் தக்கனவாகும். இதன் ஆராய்ச்சித் துறைகளும், இசைப்பகுதியும் நாடு முழுதும் பெரும் புகழ் ஈட்டியுள்ளன. இளைஞரிடத்தும் காணுவதற்கரியனவாகிய ஆற்றல், சோர்வின்மை, மன உறுதி ஆகியவற்றோடு இப்போது செயலாற்றிவரும் துணைவேந்தருக்கும் பல்கலைக்கழகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இக் கலைக்கூடம் எதிர்காலத்தில் மேலும் மேலும் முன்னேற்றமடையவேண்டும் என்பது என் உளமார்ந்த வழிபாடாகும்.

உயர்திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள்

கவர்னர், சென்னை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டமாகிய மகிழ்ச்சியும், மங்கலமும் நிறைந்த நல் வேளையில், என் உளம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் இதனோடு தொடர்பு கொண்டோர் அனைவருக்கும் புலப்படுத்துகின்றேன். இப் பல்கலைக் கழகம், தன் முன்னேற்றத்தில் இன்றியமையாத வளர்ச்சிநிலையை எய்திய நேரத்தில், அதன் வேந்தராக (Chancellor) இருக்கும் பேறு வாய்த்தமை குறித்து என் மகிழ்ச்சி மிகுகின்றது.

வள்ளன்மை சான்ற நன்கொடையாகிய இருபது லட்சம் வெண் பொற் காசுகளுடன், மூன்று கல்லூரிகளேயும் அளித்த வள்ளலின் பெருங் கொடையைச் சென்னை அரசியலார், முற்பட்டு நன்றியறித லுடன் ஏற்றுக்கொண்டபோது, 1929-ஆம் ஆண்டில், இந்த உடனுறை பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப் பெற்றது. உயர்நிலைக் கல்வி நலங் குறித்துப் பொதுநல உணர்ச்சியும், தாராள உள்ளமும் மிகுந்த பெரு மக்கள் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகளுக்கு அரசினர் ஊக்கம் நல்க வேண்டும் என்பது, நன்கு உணரப்பெற்றது.

இப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந் நன்னாளில் இக் கலைக் கழகத்துக்கு அடிப்படை யாகிய உயர்ந்த உள்ளகிடக்கை வாய்ந்த, பெருந்தகையாளராகிய செட்டி நாட்டு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களை நாம் நன்றியுணர்வோடும், பேரன்போடும் நினைக்கின்றோம். இக் கல்விக் கழகத்தின் நலத்தில் ராஜா அவர்களின் குடும்பத்தினர் நெருங்கிய பேரூக்கம் தொடர்ந்து காட்டி வருவது, மகிழ்ச்சிக்குரியதொரு செய்தி யாகும். அதற்காக அவர்கள் நம்முடைய பாராட்டுதலையும், நன்றியை யும் பெறுதற்கு உரியராவர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக, பெரும் புகழ் வாய்ந்த பலர், இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை ஏற்று, இதன் குறிக்கோளை உருவாக்கியுள்ளார்கள். அவர் களை இப் பல்கலைக் கழகம் தன்வயப்படுத்தி, அவர்களின் பாதுகாவலை யும், நல்லெண்ணத்தையும் பெறுவதில் வெற்றிபெற இயன்றது குறித்து, நாம் பெருமிதம் கொள்கின்றோம்.

இப் பல்கலைக் கழகம், பொறுப்பாளர்களின் அறிவும், ஆற்றலும் சான்ற துணைமையில், தெற்கில் புகழ்வாய்ந்ததொரு திருப்பதியின் கண் ஓர் உண்மைக் கலைக்கோயிலாக விளங்கி, 'ஊக்கமும் நன்னம் பிக்கையும்' என்ற தன் குறிக்கோளுக்கு இணங்க, ஆடவருக்கும் மகளி ருக்கும் நாட்டின் நல்வாழ்வின் ஏற்ற பங்கினை ஏற்கும் தகுதியை நிறைத்து அனுப்பும் என்பதில் ஐயமில்லை.

•

உயர்திரு. கே. காமராஜ் அவர்கள்

முதல் அமைச்சர், சென்னை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாக் கொண் டாட்டம், உண்மையிலேயே மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியாகும். தமிழ் நாட்டின் தலைமகனார் இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தம் வள்ளன்மையால் இப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்கள். அதன் வாயிலாகப் புதுமைக் கலைகளுக்கும், அறிவியலுக்கும் ஒரு பெரு நிலை யத்தை உண்டாக்கியதோடு மட்டுமன்றித் தமிழ்க்கல்விக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒரு பெருங் கலைக்கூடத்தை அமைத்தார்கள். அதனால், அரசர் பெரு மகனார் தமிழ் நாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட் டிற்கும் பெரியதொரு பணியைச் செய்திருக்கிறார்கள்.

இப் பல்கலைக் கழகம், செட்டிநாட்டு அரசர் குடும்பத்தாரின் ஆதர வையும், தளரா உதவியையும்பெறும் பெரும் பேற்றைப் பெற்றுள்ளது. அக் குடும்பத்தில் இன்று மதிப்பிற்குரியவராகத் திகழும் தலைமகனார் இராசா சர். முத்தையச்செட்டியார் அவர்களும், அவர்கள் வழிவருவாரும்

தொடர்ந்து பல்கலைக் கழகத்தை ஆதரித்து, அதன் முன்னேற்றத் துக்கு வழிகாட்டி வருவார்களென்று உறுதியாக நம்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இந்த 25 ஆண்டுகளில், பயனுள்ள வகையில் பெரு வளர்ச்சி அடைந்திருப்பதும், இதை நிறுவியவர் விரும் பியவாறு நம் நாட்டுப் பெருங்கல்வி நிலையங்களில் ஒன்றெனத் திகழ்வ தும், சென்னை மாநிலத்திலுள்ள நாமெல்லாம் பெருமிதம் கொண்டு இன்புறுதற்குரியன. இப் பல்கலைக் கழகம் இந்தியாவிலும் வெளிநாடு களிலுமுள்ள மிகப் பெருங்கல்வி நிலையங்களை ஒத்த பெருஞ்சிறப் பைப் பெற்றிருப்பது பெருமைக்குரியது.

மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், திவான்பகதூர் எஸ். இ. அரங்கநாதன், சர். கே. வி. ரெட்டி நாயுடு, திரு. எம். இரத்தின சாமி, டாக்டர் மணவாள ராமாநுஜம், டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சர். சி. பி. இராமசுவாமி ஐயர் ஆகிய பேரறிஞர்கள் வழி காட்டிய பயனை இப் பல்கலைக்கழகம் பெற்றிருக்கிறது. ஆதலால், இப் பெரும் பல்கலைக்கழகம், ஆண்டால் இளையதெனினும், கல்வி, கலை ஆகிய துறைகளில் பிறர்க்கு எடுத்துக் காட்டாகத் தக்க உயர்ந்த நிலையை உருவாக்கிக்கொண்டிருப்பது வியப்பன்று. இப்பல் கலைக் கழகம், இந் நிலையைத் தொடர்ந்து மேற்கொண்டு, எதிர்காலத் தில் இதன் சீரிய தொண்டினால் மேலும் மேலும் வளர்ச்சிபெறும் என் பதில் ஐயமில்லை.

இப் பல்கலைக் கழகம், அறிவொளி பரப்பிப் பல்லூழி காலம் நம் மக்களுக்குத் தொண்டு புரிவதாகுக.

உயர்திரு. ராசா சர். முத்தையச் செட்டியார் அவர்கள்

இணைவேந்தர் (Pro-Chancellor) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதன் வாழ்விலே சிறந்ததொரு நிலையை எய்தியுள்ள இந் நன்னாளில், இப் பல்கலைக் கழக வளர்ச்சிக்குத் துணைபுரிந்த எல்லோருக்கும் எனது பெருநன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன். இதன் வெள்ளிவிழாவை நாம் இப்போது கொண் டாடுவது, உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய தொன்றாம். இவ் விழா நிகழ்ச்சிகளில் பங்குபெறுவது என் தூய கடமையாகும். இப் பல் கலைக் கழகம், தொடக்கத்திலிருந்து சென்னை மாநில அரசியலாரிட மிருந்தும், இந்திய அரசியலாரிடமிருந்தும் இனிய ஆதரவையும் அன் பார்ந்த பேணுதலையும் பெற்று வந்துள்ளது. பேரறிஞரெனப் பெரும் புகழ் பெற்றவர்களை ஒருவர் பின் ஒருவராய்த் துணைவேந்தர்களாக அடைந்த நிகரற்ற பேறு' இதற்கு உண்டு. இக் கழக வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடுடைய, திறமைவாய்ந்த பற்பல பேராசிரியர்களும், விரி வுரையாளர்களும் கடந்த 25 ஆண்டுகளாக இங்கே பணியாற்றி வந்தி ருக்கிறார்கள். இப் பல்கலைக் கழகத்தை நிறுவியருளிய என் மதிப்பிற் குரிய தந்தையார் டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர் களின் தலையாய குறிக்கோளை இது நிறைவேற்றி, இந் நாட்டு மக்களின் அன்பு நிறைந்த உள்ளங்களில் நிலையான இடம் பெற்றுவிட்டது. இப் பல்கலைக்கழகம் பயன்மிக்க தொண்டுகள் பலவற்றைத் தொடர்ந்து

ஆற்றிவர அருள்புரியும் வண்ணம் இறைவனை உளமார வழிபடு கின்றேன்.

உயர்திரு. டாக்டர் சர். சி. பி. இராமசுவாமி ஐயர் அவர்கள்

துணைவேந்தர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

1955-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 9-ஆம் நாளில், ஆழ்ந்து அகன்ற புலமையுடையவராகிய மேன்மை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சி கட்குத் தலைமை தாங்குவார்கள். எதிர்காலத்தைப் பற்றிய தெளிந்த காட்சியுடைய வள்ளல், ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்கள், தோற்றுவித்த இப் பல்கலைக் கழகத்தை, அன்னாரின் மைந்தரும், அவர் களின் நற்செயல்களையெல்லாம் தொடர்ந்து செய்து வருகின்றவர் களும் ஆகிய ராஜா சர். முத்தையச் செட்டியார் அவர்கள் கண்ணும் கருத்துமாகப் பேணி வருகிறார்கள். கடந்த ஈராண்டுகளாக இதன் துணை வேந்தராகப் பணியாற்றி வருவதால், நேரிற் கண்டறிந்த யான், இச் சிறந்த பல்கலைக்கழகத்தின் சூழ்நிலையையும், வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்களையும் பற்றிக் கூறுதற்கு உரிமையுடையேன்.

நகரத்தின் ஆரவாரத்துக்கும், ஆடம்பரத்துக்கும், மனத்தைக் குலைக்கும் கவர்ச்சிகளுக்கும் மிக அப்பாற்பட்டு, அமைதியான சிற்றூர்ச் சூழ்நிலையில் அமைந்திருப்பது, இப் பல்கலைக் கழகத்தின் தனிச்சிறப்பா கும். இத்தகைய சூழ்நிலை, உடனுறை பல்கலைக் கழகத்திற்கு மிக இன்றி யமையாதது. கலை, அறிவியல், பொறியியல் முதலிய பல துறைகளிலும் இப் பல்கலைக் கழகம் உயர்ந்த, புதிய பயிற்சியளிக்க வேண்டுமென்பது பல்கலைக் கழகம் நிறுவியவர்களின் உறுதியான நோக்கமாகும். மேலும், பயில வேண்டிய ஆங்கிலம், வடமொழி இவற்றின் வளர்ச்சி குறையாத முறையில், சிறப்பாகத் தமிழ்ப்பண்பாட்டின் எல்லாப் பகுதிகளையும் பற்றிய கல்வியையும், ஆராய்ச்சியையும், வளர்க்க வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள். அவர்களது இந்த எண்ணம் பெரும்பாலும் நிறைவேறியிருக்கிறது. இப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் உழைப்பின் பயனாகக் குறிப்பிடத்தக்க பல நூல்கள், வெளி வந்திருப்பது இதற்குச் சான்றாகும்.

தலைசிறந்த பயிற்சியையும், அதற்கு வேண்டிய கருவிகளையும் பெருக்க வேண்டுமென்ற கொள்கையை மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் முதல், எனக்கு முன்பிருந்த டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் வரை பதவியிலிருந்த துணைவேந்தர்கள் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர். கல்வியோடு நில்லாமல், மாணவர் இல்லங்கள், விளையாட்டிடங்கள், சமூக வாழ்வின் பல துறைகள் ஆகியவைபற்றிய நிகழ்ச்சிகளும் இங்கே நன்கு அமைந்துள்ளன. சுற்றியிருக்கும் சிற்றூர் களில் உள்ள உழவர் குடும்பத்தாருடனும், மற்றையோருடனும் மாண வர்கள் தொடர்புகொண்டு செயலாற்றுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இப் புதிய முயற்சி முதன் முதலாக, இப் பல்கலைக்கழகத்திலேயே மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக நாடு, நகரம், பாமரர், படித்தவர் ஆகியோரிடையுள்ள தீமையை விளைக் கும் பிளவுகள் நீங்கும் என்று நம்பலாம்.

இவ் வெள்ளிவிழாவின்போது, பல்கலைக்கழகம் இதுவரை செய்து முடித்த செயல்களை மட்டும் கணக்கிட்டுவிட்டு அமைந்துவிட லாகாது; எதிர்காலத்திற்கும் விரிவான திட்டம் வகுக்க வேண்டும். மாணவர் அனைவர்க்கும் உடல்நலம் தருவதாய் உள்ள போதிய உறைவிடம் அளிக்காத கல்விநிலையம், உடனுறை பல்கலைக்கழகம் ஆகாது. பன்னிருவருக்கு மேற்படாத மாணவர்களுடன் பழகி, அவர்களுக்கு அறிவுத்துறையிலே தோன்றும் ஆர்வத்தையும், அவர்களது உள்ளத்தே எழும் இன்னல்களையும் கவனித்துப் பொறுப்பேற்கும் ஆசிரியரின் கண்காணிப்பின்றேல், மாணவரில்லவ வாழ்வு, பயனற்றுவிடும். அறிவிற்கும், ஒழுக்கத்திற்கும் வித்திட்டு, அவற்றை ஒருங்கு வளர்க்க உதவும் சிறந்த நூல் நிலையமும், பட்டி மன்றமும் இருந்தால்தான் மேற்சொன்ன 'கண்காணிப்பு முறை' செவ்வனே நடைபெற முடியும்.

மேற்கூறிய தேவைகளை விரைந்து பெறுதல் வேண்டும்; அப்பொழுதுதான் ஆசிரியர்-மாணவர் ஒருமைப்பாடு வளரும்; இப்போது நிலவிவரும் ஏமாற்றமும் ஒழியும். இதற்கு இயற்கையான கட்டுப்பாடு இன்றியமையாதது. மேற்கூறிய நோக்கங்கள் நிறைவேறுதவரை இயற்கையான கட்டுப்பாடு அமையாது. வளர்ச்சி அனைத்துக்கும் வேண்டிய அடிப்படையானவை இப் பல்கலைக்கழகத்தில் நிறைந்திருக்கின்றன. இந் நிலையத்தின் முன்னேற்றத்துக்குப் பொறுப்பேற்றவர்களிடையே நட்பும், ஒத்துழைப்பும் வளர வேண்டும். பாராட்டி ஊக்குவிக்கும் பொதுமக்களின் ஆதரவு, இப் பல்கலைக்கழகத்துக்கு இன்றியமையாதது. பொதுமக்களுடன் எளிமையாகப் பழகுகின்றவர்களும், உயர்ந்த நோக்கம் உடையவர்களும் ஆகிய எதிர்காலத் தலைவர்களைத் தோற்றுவித்தற்குரியது, சீரிய முறையில் அமைந்த உயர்தரக் கல்வியே.

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள்

தமிழ் நாட்டின். தமிழ்ப் பல்கலைக் கழகமாக இருந்து தமிழருக்கும் தமிழுக்கும், தமிழ்நாகரிகத்திற்கும் அரண்செய்து வரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ இருப்பதறிந்து மகிழ்வெய்துகின்றோம். விழா இனிதே நிறைவேறுவதாக.

தமிழகத்தின் வரலாற்றில் பல்கலைக் கழகங்கள் பல இருந்ததாகத் தெரிகிறது. சிறப்பாக உலகில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத காலத்தில் தாய் மொழித் துறையில் பல்கலைக் கழகம் வைத்து மொழியையும் மொழியின் உயிரோட்டமான பண்பாட்டையும் வளர்த்த பெருமை பழந் தமிழருக்கே உரியது. தமிழ்ச்சங்கங்கள் என்று, தமிழர்களால் பாராட்டப்பெறும் சங்கங்களெல்லாம் பண்டு பல்கலைக் கழகங்களாகவே இருந்தன. அப் பல்கலைக் கழகங்கள் தமிழை வளர்த்ததோடு மாத்திரமன்றி உலகநாகரிகத்திற்கு அடிப்படையான கருத்துக்களை வழங்குகின்ற சிறந்த இலக்கியங்களையும் படைத்துக் கொடுத்தன.

அந்த மரபின் வழி வந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டுகளில் ஆற்றிய பணியையும், இனி எதிர்கால நலம் நோக்கி ஆற்ற இருக்கும் திருப்பணிகளையும் நினைந்து உள்ளம் நிறைந்த உவகையோடு இப் பல்கலைக் கழகத்தின் தந்தை, செட்டி நாட்டரசர் அவர்களைப் பாராட்டுகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தமிழன்னையின் திருவடிகளை வந்தித்து வாழ்த்துகின்றோம்.

உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

கலைக்கோயில் வாழ்க.

தமிழ்நாட்டில் எல்லையற்ற பெருமை வாய்ந்தது தில்லையம்பதி. கோயில் என்ற பொதுப்பெயரைத் தனக்கே உரிய சிறப்புப் பெயர் ஆக்கிக்கொண்டது தில்லைச் சிற்றம்பலம். இத்தகைய பெருமை சான்ற தில்லையின் எல்லையில், எண்ணும் எழுத்தும் உள்ளவரை அழியாத கலைஞானக்கோயிலை நிறுவி, ஆன்ற புகழ் பெற்றார் **அண்ணாமலை அரசர்.** அவர் பெயரால் அமைந்த பல்கலைக் கழகம் சிறப்பு வகையில் தமிழ்க் கலைகளை ஆதரித்து வளர்க்கும் செழுங்கலைக் கோயிலாகத் திகழ்கின்றது. இருபத்தைந்து ஆண்டுகளாகத் தகவுடையோர் உள்ளத்தில் வீற்றிருக்கும் தகைசான்ற **அண்ணாமலைப் பல்கலைக் கழகம்** இவ்வாண்டில் வெள்ளி விழா நிகழ்த்தும் பேறுபெற்றது. இந்த விழாவில் பல்கலைக் கழகத்தைக் கண்ணினைக் காக்கும் இமைபோல் பாதுகாத்து வளர்த்த **அண்ணாமலை வள்ளலின்** சீர்மையைப் பாட்டாலும் உரையாலும் பாராட்டி நன்றி செலுத்துவர் நல்லறிஞர்.

இக் கலைக் கோயிலில் ஆறாண்டுகள் சேவை செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. முத்தமிழ்க் கலைகளும் முறையாகச் செழித்துத் தழைத்து வாழ்தல் வேண்டும் என்னும் அடிப்படையான நோக்கத்தைக் கொண்டு இப் பல்கலைக்கழகத்தின் புரவலரும், புலவர்களும் இடையறாப் பணி புரிந்து வருகின்றனர். தமிழ்மொழியை விருப்பப் பாடமாகக் கொண்டு பி. ஏ. ஆனர்ஸ் என்னும் கலைப் பட்டம் பெறுதற்குரிய திட்டத்தை முதல் முதல் வகுத்து உதவிய பெருமை **அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியதாகும்.** தாய் மொழி ஒன்றையே ஆழமாகக் கற்றுத் திறமான புலமைபெறக் கருதும் மாணவர்க்குப் பொருள் கொடுத்து ஊக்குவிக்கும் சிறப்பும் **இப் பல்கலைக் கழகத்திற்கே உரியதாகும்.** மேலும் தமிழகத்தில் தலைசிறந்த அறிஞர்களாகத் திகழும் புலவர் பெருமக்களை ஆசிரியர்களாக ஏற்றுத் தமிழ்மாணவர்க்குக் கலை விருந்தளிக்கும் பெருமையும் இப் பல்கலைக்கழகத்தையே சாரும். முன்னாளில் மூன்றுகவடாய் முளைத்தெழுந்த தமிழின் நீர்மையை உணர்த்தும் வகையில், இந் நாளில் மூன்று தமிழ்ப் பேராசிரியர்களைக் கொண்டு தமிழ் வளர்ப்பதும் இப் பல்கலைக்கழகமேயாகும். இவ்வாறு பல்லாற்றானும் பணி செய்து தமிழகத்தின் தண்ணொளியாய்த் திகழும் **அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,** எல்லையற்ற காலம் தில்லைப்பெருமான் திருவருளால் இனிது வாழ்க.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



அண்ணமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின்போது (9—2—1955) கலந்துகொண்ட பெருமக்கள்



இராசா சர். முத்தையச் செட்டியாரும், சோமசுந்தர பாரதியாரும்

பேராசிரியர், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் வரவேற்புரை வழங்குதல்



இராசா சர். முத்தையச் செட்டியார் சோமசுந்தர பாரதியாருக்குப்
பொன்னுடை போர்த்துச் சிறப்புச் செய்தல்

பரிபாடல் மாநாடு



உட்கார்ந்திருப்பவர் (இடமிருந்து வலம): 1 திரு. வ. சுப்பையா பிள்ளை; 2 திரு. கு. அருணாசலக் கவுண்டர்; 3 திரு. தி. சுந்தரஞ் செட்டியார்; 4 திரு. சுவாமிநாதத் தம்பிரானவர்கள்; 5. திரு. மு. காசி விசுவநாதன் செட்டியார்; 6. திரு. கி. இராமலிங்கமுதலியார்.

நிற்பவர் (இடமிருந்து வலம்): 1. திரு. சா. கணபதி முதலியார்; 2. திரு. ந. சேதுரகுநாதன்; 3. திரு. அ. க. நவநீத கிருட்டிணன்; 4. திரு. கு. பரமசிவம்; 5. திரு. மு. சாத்தப்ப செட்டியார்; 6. பொ. முத்துக்கருப்ப பிள்ளை; 7. திரு. மு. நாராயணன் செட்டியார்; 8. திரு. சொ. சிங்கார வேலன்.